10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 203 புதன்கிழமை டிசெம்பர் 13 2017 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## விவசாயி தற்கொலை

### வடமராட்சியில் துயரம்

வடமராட்சி, டிசெ. 13

வெங்காயச் செய்கையில் ஏற்பட்ட நஷ்டத்தால் தனக்குத் தானே தீ மூட்டி விவசாயி ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

வடமராட்சி - அல்வாயைச் சேர்ந்த மார்க்கண்டு உதயராஜா என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு 06▶

# வடக்கை சூறையாட அரசுக்கு இடமளியோம்



## முதலமைச்சர் விக்னேஸ்வரன் சூளுரை

யாழ்ப்பாணம், டிசெம்பர் 13

வடக்கு மாகாணத்தை அரசியல், பொருளாதார ரீதியில் இலாபம் பெறும் இடமாகவே மத்திய அரசும் அதில் இருப்பவர்களும் பார்க்கிறார்கள். வடக்கின் வளங்களை சூறையாட அவர்களுக்கு ஒருபோதும் நாம் இடமளியோம்.

இவ்வாறு வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வட மாகாண வரவு – செலவுத் திட்டத்தை நேற்று சபையில் முன்வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் எமது வடக்கு மாகாணத்தை 06▶

## ஒரே பார்வையில்...

2018ஆம் ஆண்டின் வடக்கு மாகாண சபை செலவினங்களுக்காக நிதி ஆணைக்குழுவால் தேசிய பாதீட்டு திணைக்களத்துக்கு சிபாரிசு செய்யப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை உள்ளடங்கலாக நிதிக்கூற்று ஒதுக்கீடு:

| |
|---|
| மீண்டு வரும் செலவினம் – 2291. 093 கோடி ரூபா |
| மத்திய அரசின் தொகுதிக் கொடை– 1865.093 கோடி ரூபா |
| மத்திய அரசு வருமானம் – 275 கோடி ரூபா |
| மாகாண அரசு வருமானம் – 75 கோடி ரூபா |
| முத்திரைத் தீர்வை – 48 கோடி ரூபா |
| நீதிமன்ற தண்டப் பணம் – 14 கோடி ரூபா |
| முத்திரைத் தீர்வை மீளளிப்பு – 14 கோடி ரூபா |
| மூலதனச் செலவினம் 384. 312 கோடி ரூபா |
| பிரமாண கொடை – 55. 12 கோடி ரூபா |
| மாகாண அபிவிருத்திக் கொடை – 282. 987 கோடி ரூபா |
| பாடசாலைக் கல்வி மாற்றம் –5. 5 கோடி ரூபா |
| சுகாதார அபிவிருத்தி – 32. 48 கோடி ரூபா |
| வெளிநாட்டு உதவித் திட்டம் – 6. 225 கோடி ரூபா |
| வீதி இணைப்புத் திட்டம் – 1. 725 கோடி ரூபா |
| பொதுக் கல்வி நவீனப்படுத்தல் – 4. 5 கோடி ரூபா |
| காற்றாலைத் திட்டம் (கூட்டு) – 2 கோடி ரூபா |

## முதலமைச்சரான அவைத்தலைவர் கலகலப்பானது வட மாகாண சபை



யாழ்ப்பாணம், டிசெ. 13

அவைத்தலைவர் சீ.வீ. கே. சிவஞானத்தை "முதலமைச்சர்" என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனே விளித்தமையால் சபையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

எனினும் தனது தடுமாற்றத்தை சமாளித்துக் கொண்ட முதலமைச்சர் "நான் எதிர்காலத்தைப் பற்றியே கூறினேன்..." எனச் சொல்ல, அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் "இப்படி தான் பலரும் பலவற்றைக் கூறி வருகின்றனர்" என சிரித்துக் கொண்டே சொன்னார். 06▶



## யாழ். மாநகர மேயர் வேட்பாளர் ஊடகவியலாளர் வித்தியாதரன்

### உயர்மட்ட வட்டாரங்கள் உறுதி

யாழ்ப்பாணம், டிசெ. 13

யாழ். மாநகர சபை மேயர் வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மூத்த ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் நிறுத்தப்படுவது உறுதியாகியுள்ளது. எனினும் இதனை அக்கட்சி உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை.

யாழ். மாநகர மேயர் வேட்பாளராக மூத்த ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் உட்பட ஐவரின் பெயர் பட்டியல் அண்மையில் வெளியானது. இப்பட்டியலில் வித்தியாதரனின் பெயர் இணைக்கப்பட்டமைக்கு அக்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

தனது எதிர்ப்பை மீறினால் 06▶

## "டில்லு" வாள்வெட்டுக் கும்பலின் சிறைத் தண்டனை உறுதியானது

யாழ்ப்பாணம், டிசெ. 13

"டில்லு" குறுாப் என அறியப்பட்ட வாள்வெட்டுக் கும்பலைச் சேர்ந்த எண்மருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று வழங்கிய சிறைத் தண்டனையை நேற்று உறுதி செய்து தீர்ப்பளித்தது யாழ். மேல் நீதிமன்றம்.

யாழ்ப்பாணம் மடம் வீதியில் விமலராஜன் விக்னராஜா என்பவரை கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூலை 5 ஆம் திகதி கும்பல் ஒன்று வாளால் வெட்டிக் காயப்படுத்தியது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் டில்லு வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த 8 பேரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்தனர்.

சத்தியநாதன் அன்ரனிஸ் அல்லது டில்லு, அரவிந்தன் அலெக்ஸ் மற்றும் சிவேந்திரன் கலிஸ்ரன் ஆகியோருக்கு 3 ஆண்டுகள் கடூழியச் 06▶

## விடுவிக்க முடியாது

### இந்திய உச்ச நீதிமன்றம்



சென்னை,டிசெ.13

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் கைதான பேரறிவாளனை தற்போதைய சூழ்நிலையில் விடுவிக்க முடியாதெனஉச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற பேரறிவாளன் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். சிகிச்சைக்காக அவர் சென்னை புழல் சிறைக்கு விரைவில் மாற்றப்படவிருக்கிறார். இந்த நிலையில் தனக்கு 06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

எதிரொலி
Ethiroli
புதன் 13 டிசெம்பர் 2017

# வடக்கைச் சுரண்டி வளங்களை சூறையாடும் மத்திய அரசின் முயற்சிக்கு இடமளியோம்

## முதலமைச்சர் சூளுரை



முதலாவது வடக்கு மாகாணசபையின்
112வது அமர்வு
12/12/2017 அன்று காலை 9.30 மணிக்கு
மாகாண பேரவைச் சபா மண்டபத்தில்
முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்படும்
2018ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம்
அறிமுகவுரை
குருர் ப்ரம்மா.........

கௌரவ அவைத்தலைவர் அவர்களே, கௌரவ அமைச்சர்களே,

கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, கௌரவ உறுப்பினர்களே!

இது எமது முதலாவது வடக்கு மாகாணசபையின் ஐந்தாவதும் கடைசியுமான வரவு செலவுத் திட்டம்.

எமது சபை பல நெருக்கடிகளைச் சந்தித்து அதன் ஐந்தாவது வருடத்தை எட்டியுள்ளது. ஐந்தாவதும் கடைசியுமான வரவு செலவுத் திட்டத்தை நானே தொடர்ந்து சமர்ப்பிக்க முடிந்துள்ளதையிட்டு இறைவனுக்கு எனது வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந் நாட்டின் ஒன்பது மாகாண சபைகள் அனைத்திலுங் கடைசியாகப் பதவியேற்ற மாகாண சபையே எமதாகும். அதன் இது வரையிலான பதவிக் காலத்தையும் முன்னின்று வழிநடத்திய எமது அவைத்தலைவர் பாராட்டுக்குரியவர். அவரின் விருப்பு வெறுப்புக்கள் எம்மைப் பெரிதும் சில வேளைகளில் பாதித்திருக்கலாம். ஆனால் அவரின் அனுபவமும் நிர்வாக நடைமுறையும் இந்த நான்கு வருடங்களில் பளிச்செனக் காணக் கூடியதாக அமைந்திருந்தன.

எமது ஐந்தாவது வரவு செலவுத் திட்டத்தை விதிமுறையாகச் சமர்ப்பிப்பதற்கு முன் அறிமுகவுரையாக சில விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

எமது அபிவிருத்தியைப் பற்றிப் பேசும் போது பலர் வருமானந்தரும் பாரிய பொருளாதார செயற்றிட்டங்களையே பொதுவாக நோக்குகின்றனர். பொருளாதார அபிவிருத்தி அத்தியாவசியமானதொன்று என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்க முடியாது. ஆனால் அதனை எவ்வாறு பெறப் போகின்றோம் என்பதை நாங்கள் ஆய்ந்துணர வேண்டும். எமது பொருளாதார விருத்திக்கு இடம் கொடுக்க முன்வருபவர்கள் எம்மிடம் இருந்து எதை எதிர்பார்க்கின்றார்கள் என்பதை நாம் கணிக்க வேண்டும். முக்கியமாக மத்திய அரசாங்கம் எந்த அடிப்படையில் எமக்கு உதவிகள் வழங்க முன்வருகின்றது? இன்றிருக்கும் பாராளுமன்றத்தில் எனக்குத் தெரிந்தவர்களும் என் கல்லூரியின் பழைய மாணவர்களும் கணிசமானவர்கள் இருக்கின்றார்கள். அவர்களிடம் இருந்து உதவிகளைப் பெற எமக்கு அதிகம் சிரமம் இருக்கத்தேவையில்லை. ஆனால் அவர்கள் எவ்வாறு எமது வடமாகாணத்தை நோக்குகின்றார்கள் என்பதை நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதாவது எமக்கு ஏதேனும் நன்மைகள் பெற்றுக் கொடுக்கும் போது எமது பிரதேசத்தை வளப்படுத்த வேண்டும், விருத்தி செய்ய வேண்டும், முன்னேற்ற வேண்டும் என்பதிலும் பார்க்க தமக்கு அதனால் என்ன நன்மை கிடைக்கும் என்றே எதிர்பார்க்கின்றார்கள். இதன் காரணத்தினால் எமக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டுள்ள விடயங்களையும் மாவட்ட செயலாளர்கள் ஊடாகவே நடைமுறைப்படுத்தப் பார்க்கின்றார்கள். ஆயினும் மாகாணசபை உத்தியோகத்தர்கள் மூலமே அவை செயற்படுத்தப்படுகின்றன. இவை எமக்குரிய விடயங்கள் என்பதை ஏற்றுள்ளதால்த்தான் எம்மைக் கொண்டு நடைமுறைப்படுத்துகின்றார்கள். ஆனால் எம்மிடந் தந்து அவற்றை நடைமுறைப்படுத்தாது மாவட்ட செயலாளர்களின் தயவையே நாடுகின்றார்கள். தாமே எமக்கு வளங்களை வழங்கியதாகப் பின்னர் தம்பட்டம் அடிக்கின்றார்கள். அதாவது உலக நாடுகள் தரும் நிதியை எம் அலுவலர்களைக் கொண்டு நடைமுறைப்படுத்துகின்றார்கள். ஆனால் இடையில் தம்மையும் மத்தியின் அலுவலர்களையும் உள் நுழைக்கின்றார்கள் அரசியல் நன்மைகளுக்காக.

அடுத்து ஒருங்கியல் அதிகாரங்களையும் (Concurrent Powers) அவர்களே தாம் நினைத்தவாறு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவே விழைகின்றார்கள். உதாரணத்திற்கு பிரதமர் எமது தீவுப் பகுதி முன்னேற்றத்திற்கென ஒரு பொருளாதாரத் திட்டத்தை வகுத்துள்ளார். அதுபற்றி எமக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எமது கருத்துக்களும் உள்ளேற்கப்படவில்லை. பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் வர முன்னர் செயற்பட்டவாறே இப்பொழுதும் செயற்பட்டு வருகின்றார்கள். காணிகள் சம்பந்தமாக வனத் திணைக்களம் ஊடாக தமது உள்ளீடுகளைச் செய்கின்றார்கள். எம் மக்கள் பல காலம் இருந்து மரங்களையும் வளர்த்து விட்டு போர்க் காலங்களில் இடம்பெயர்ந்து சென்று திரும்பி வந்த போது அவர்களின் காணிகளை வனத் திணைக்களம் கையேற்றுள்ளது. எம்மவர் நட்ட மரங்களைக் காட்டியே இவை வனத்திற்குரிய காணிகள் என்று உரிமை கோருகின்றார்கள். தான் தோன்றித்தனமாக வனத் திணைக்களம் நடந்து கொள்கின்றது. விரைவில் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த இருக்கின்றேன். நேற்றைய தினம் எனக்குக் கிடைத்த தகவல்படி கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் 08.03.2017ந் திகதிய வர்த்தமானியில் எம்முடன் தொடர்பு கொள்ளாமல் நீர்வாழ் உயிரினச் செய்கைக்காக கரையோர உவர் நீர்ப் பிரதேசங்கள் வடமாகாணத்தில் பிரகடனப்படுத்தியுள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் 535 ஹெக்டயரும் தீவகத்துடன் சேர்ந்த யாழ்ப்பாண மாவட்டத்தில் 4560 ஹெக்டயரும் மன்னார் மாவட்டத்தில் 2193 ஹெக்டயரும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்விடங்களில் பாரம்பரியமாக கடல் அட்டை வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் எம் மக்களை விரட்டிவிட்டு ஒரு கம்பனியைக் கொண்டுவந்து கடல் அட்டை வியாபாரத்தில் ஈடுபடுத்துவதே அவர்களின் எண்ணம். தான் தோன்றித் தனமாக தங்கள் வருமானத்தை ஈட்ட எம்மைப் பாவிக்கப் பார்க்கின்றார்கள்.

என்னிலும் பார்க்கக் கூடிய வயதுடைய ஒரு அமைச்சர், பலவருடங்களாக எனக்குத் தெரிந்த ஒருவர், தாம் வடமாகாணத்தில் செய்ய விழையும் பொருளாதார விருத்திக்கு முதலமைச்சர் தடையாக உள்ளார் என்று அண்மையில் பாராளுமன்றத்தில் வெளிப்படையாகக் கூறியிருந்தார். அதன் பின் பாராளுமன்ற பிரகாரத்தினுள் அண்மையில் நான் சென்றிருந்த போது என்னை விட்டுக் கலைத்து வந்து சுற்றியுள்ள யாவர்க்கும் “நாங்கள் எவ்வளவு காலத்து நண்பர்கள்“ என்று கூறிவிட்டு தாம் வடமாகாணத்தில் செய்யும் அபிவிருத்திகளுக்கு என்னை உதவி செய்யுமாறு கோரினார். “அதற்கென்ன கேளுங்கள். சட்ட திட்டங்களுக்கேற்ப எமது வழிமுறைகளுக்கேற்ப உங்கள் கோரிக்கைகளை பரிசீலனை செய்கின்றோம்” என்றேன். வன்னியின் பறவைகள் – சரணாலயத்தில் பாரிய விடுதி கட்டுவது, 500 ஏக்கர் – 600 ஏக்கர் வன்னி நிலத்தில் திறந்த விலங்கு காட்சிச்சாலையொன்றை அமைப்பது போன்ற செயற்றிட்டங்கள் தான் அவரின் குறிக்கோள். அதாவது எமது வன்னி நிலப் பறவைகளையும், விலங்குகளையும் பார்க்க வெளியில் இருந்து வருவோர் சொகுசாக வந்திருந்து பார்த்துச் செல்ல உதவியளிக்கும் நடவடிக்கை எடுக்கவே அவர் முனைந்துள்ளார். அவ்வாறான குறிக்கோள்களுக்கு நாம் ஆராயாமல் இடங் கொடுத்தால் பறவைகளின் சுதந்திரமான இயல்பான வருகையில் இடையூறு ஏற்படும் என்று நினைக்கின்றேன். திறந்த விலங்குக் காட்சிச் சாலை அமைத்தால் அண்டிய பகுதிகளில் வாழும் கிராமத்தவர்களின் வாழ்க்கையில் விலங்குகளின் பாதிப்பு அதிகமாகிவிடும், அவர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகிவிடும். காசொன்றே கரிசனையாக மத்தியினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந் நடவடிக்கையினால் எமது உள்ளூர் வளங்களையும் இயற்கை சமநிலையையும் பேணுவதைக் கவனத்திற்கெடுக்காது வருமானம் ஈட்டுவதை மட்டுமே மத்திய அரசு குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந் நடவடிக்கையினால் உள்ளூர் மாகாண ஆட்சியின் கைதளர்ந்து விடும். எனவே இவை சம்பந்தமாக நாங்கள் மிகவும் அவதானத்துடன் கடமையாற்றி வருகின்றோம்.

இன்னொருவர் எமக்கு உலக ரீதியில் மதிப்பைக் கொண்டுவரக் கூடிய மைதானம் ஒன்றை மகிழ்வாக மில்லியன்கள் செலவில் உருவாக்கித் தருவதாகக் கூறினார். வெளிப்படைத்தன்மையுடன் எமது வடமாகாண நிர்வாகத்தின் பங்களிப்புடன் எம்மைப் பங்குதாரர்களாக ஏற்று இதைச் செய்ய நாம் விரும்புகின்றோம் என்றேன். அவர் பின் வாங்கிவிட்டார். வெளிப்படைத்தன்மையில்லாமல் கூறு விலைகளை சர்வதேச அரங்கில் கோராமல் அவர் தாம் நினைத்தவர்களுடன் மைதானம் அமைக்கும் உடன்படிக்கைகளை எழுத விட்டால் நாம் அதில் இருந்து விடுபட்டுப் போவோம்! எல்லாம் மத்தி மயம் ஆகிவிடும். நண்பருக்கு மட்டும் நல்ல நன்மை கிடைக்கும்!

ஆகவே தான் நாங்கள் பொருளாதார ரீதியாகப் பலர் கொண்டுவரும் செயற்றிட்டங்களை மிகவும் கவனமாகப் பரிசீலித்து சாத்தியமான போது எமது அனுசரணையை வழங்குகின்றோம். எமது அனுசரணை சில விடயங்களைப் பொறுத்த வரையில் கிடைக்கவில்லை என்றவுடன் வடமாகாணப் பொருளாதார விருத்தியில் எமக்கு உடன்பாடில்லை, வந்தவற்றை எடுத்தெறிகின்றோம் என்று கூறுகின்றார்கள். அவர்களிடம் இருந்து பணம் பெற்று, தரகர் தட்சணை பெற்று, செயற்றிட்டங்களை உள்ளே ஏற்றுக் கொண்ட காலமும் இருந்தது. அதையே பலர் இன்னும் எதிர்பார்க்கின்றார்கள். எம்மால் முடியாதென்றவுடன் மத்தியுடன் பேசி அல்லது ஆளுநருடன் பேசி காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கின்றார்கள். எமக்கு எமது பொருளாதார விருத்தியில் ஈடுபாடில்லை என்று கதை கட்டி விடுகின்றார்கள்.

எமக்கு எமது மாகாண மக்களின் வருங்காலமே முக்கியம். அவர்களின் வாழ்வாதாரங்களை நீடித்து நிலைபெறச் செய்ய ஆவன செய்வதும் அதற்காக வழியமைப்பதுமே எமது குறிக்கோள். “பணம் வந்தால் போதும்“ என்ற அடிப்படையில் நன்மைகளைப் பெறுவதை நாம் ஏற்க மறுக்கின்றோம். வருமானமே வரப்பிரசாதம் என்ற கொள்கை எமது வாழ்க்கை முறையை மாற்றிவிடும். சுற்றுச் சூழலைப் பாதித்து விடும். எமது தனித்துவத்தை நாம் தொலைத்து விடுவோம். தனிப்பட்ட நன்மைகளைச் சிலர் பெற

### வட மாகாண சபை பாதீடு - 2018

லாம். ஆனால் எமது ஒட்டுமொத்த வருங்காலம் பாதிப்படையும்.

சுற்றுலா பெயரைச் சொல்லி இன்று தெற்கில் சில இடங்கள் எந்த நிலையை அடைந்துள்ளன என்பதை நாம் அறிவோம். அந்த நிலை எமக்கும் வர வேண்டுமா? எமது கலாசாரம், பண்பாடு, விழுமியங்களைக் காற்றோடு பறக்க விட்டு நாம் காசுக்காகப் பறக்க வேண்டும் என்று எம்மவர் எண்ணுகின்றார்களா? கலாசாரம் தேவையில்லை, பண்பாடுகள் தேவையில்லை, எமது பாரம்பரியங்கள் தேவையில்லை, விழுமியங்கள் தேவையில்லை பணம் ஒன்றே முக்கியம் என்று எமது உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக ஒன்றிணைந்து பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றுவார்களானால் தெற்கில் உள்ளோரைப் பிடித்து அங்கிருக்கும் அவர்களுக்குத் தேவையான செயற்பாடுகளையும், செயற்றிட்டங்களையும் இங்கு நிறைவேற்றத் தயார். ஆனால் அதனால் எமது தனித்துவம் பறி போய்விடும். தாயகம் அழிந்துவிடும். நாங்கள் மாகாண ரீதியாகப் பெரும்பான்மையினரின் ஒரு அலகாகி விடுவோம். அந்தக் கட்டத்தில் அதனைத் தடுக்க எமக்கிருக்கும் தற்போதைய அதிகாரங்கள் போதுமானதாகாது என்பதை மனதில் வைத்திருங்கள். தெற்கை எதிர்பார்த்தே எமது வாழ்க்கை முறை அமையும். அதையே மத்தி விரும்புகின்றது. தமது கட்டுப்பாட்டுக்குள் நாம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றது. அதிகாரப் பகிர்வு கூட பெரும்பான்மையினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் இருந்து கொண்டே எம்மால் அனுபவிக்கப்பட வேண்டும் என்று எதிர் பார்க்கின்றார்கள்.

ஆகவே பாரிய செயற்றிட்டங்களை நாம் இயற்றவில்லை, பொருளாதார ரீதியாக முன்னேறவில்லை என்பவர்கள் அரசியல் ரீதியாக எமக்குத் தகுந்த அதிகாரங்கள் கிடைக்கும் வரை சற்றுப் பொறுமையாக இருக்க வேண்டுகின்றேன். எனினும் பின்வரும் செயற்றிட்டங்களில் நாம் தற்போது ஈடுபட்டு வருகின்றோம்.

1. பளையில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது. அதன் கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு (CSR) கிடைத்து வருகின்றது.

2. தனங்கிளப்பு உப்பளத் தொழிற்சாலை விரைவில் அமுல்ப்படுத்தப்பட இருக்கின்றது.

3. ஓமானிய கம்பெனியின் பழங்களும் மரக்கறிகளும் ஏற்றுமதிக்காகப் பயிரிடப்படுவதற்கான திட்டம் பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கொழும்பில் இருந்து காணி ஆணையாளரின் காணி விடுவிப்பு அனுமதியை எதிர்பார்த்திருக்கின்றோம். இந்தச் செயல்த்திட்டத்தால் சுமார் 300 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

4. பொன்னாலை சூரிய மின்னுற்பத்தித் திட்டத்தின் கீழ் பொன்னாலையில் 2 மெகாவாற் சூரியமின் உற்பத்தி கருத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை 10 மெகாவாற்றுக்கு மாற்றுமாறு கேட்டதை பல்கலைக்கழக பொறியியற் பீட பேராசிரியர், இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள், சுற்றுச் சூழல் அதிகார சபையினது மாவட்ட அதிகாரிகள் மற்றும் எமது மாகாண சபை அதிகாரிகள் கூடி ஆராய்ந்து 2 மெகாவாட் மின் உற்பத்திக்கு 12 ஏக்கர்களை விடுவிக்க உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. 10 மெகாவாட் மின்னுற்பத்திக்கு 60 ஏக்கர் காணி வழங்குவதிலும், Power Line இணைப்பை சுன்னாகம் மின்னுற்பத்தி நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படுவது சம்பந்தமாகவும் சில இடர்ப்பாடுகள் எழுந்துள்ளன. ஆனால் இரண்டில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு சூரிய மின்னுற்பத்தி நடைமுறைப்படுத்தப்படும்.

5. பளையில் 1 மெகாவாட் சூரிய மின்னுற்பத்திக்கு வழி அமைக்கப்பட்டுள்ளது. கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு (CSR) பற்றிய அறிக்கை பெற்றபின் அனுமதி வழங்கப்படும்.

6. பூநகரி முழங்காவில் பகுதியில் விவசாயப் பண்ணை அமைக்க 25 ஏக்கர் காணி விடுவிக்கப் பட்டுள்ளது. அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இப் பகுதியில் வாழும் சுமார் 250 விவசாயக் குடும்பங்கள் இதனால்ப் பயனடைவார்கள்.

7. கிளிநொச்சி கரும்புத் தோட்டக் காணியில் கரும்பு உற்பத்திக்குப் பதிலாக விவசாயக் கால்நடைப் பண்ணை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பண்ணை தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றது என அறியப்படுகின்றது.

8. நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டத்திற்கான திட்ட முன் மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான 32 ஏக்கர் காணி மாதகல், கேரதீவு, மயிலிட்டி பகுதிகளில் அடையாளம் காணப்பட்டு வருகின்றது. விரைவில் அறிக்கைகள் பெற்ற பின் நடைமுறைக்கு வரும்.

9. திண்மக் கழிவு முகாமைத்துவ முன்னோடித் திட்டம் பற்றிய திட்ட முன் மொழிவு கிடைத்து உரிய பேராசிரியர்கள், அலுவலர்கள் ஆகியோருடன் ஆலோசனை நடாத்தப்பட்டு நொதிய ஆய்வுகூட பரிசோதனைக்கு விடப்பட்டுள்ளது. நொதியத்தின் மூலம் (Enzymes) கழிவுகளை மிக விரைவில் உக்கச் செய்வதே இதன் குறிக்கோள். ஆய்வுகூட பரிசோதனைகள் சாதகமாய் அமைந்தால் திண்மக் கழிவு அகற்றல் மிக விரைவில் குறைந்த செலவில் நடைபெறும்.

10. வடமராட்சியில் உடுப்பிட்டியில் ஆடைத் தொழிற்சாலை கனடா வாழ் புலம் பெயர் தமிழர்களால் உருவாக்கப்பட்டு எம்முடன் கூட்டு அடிப்படையில் நடாத்தி வரப்படுகின்றது. இப் பகுதியில் உள்ள வேலையில்லாத இளம் பெண்கள் பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில்த்தான் எமது நிதிக்கூற்றைச் சமர்ப்பிக்க முன்னர் வடக்கு மாகாணசபையின் 2018ம் ஆண்டுக்கான ஐந்தாவது வரவு செலவுத் திட்டம் பற்றிய சில விபரங்களை இச் சபை முன் சமர்ப்பிக்க முனைகின்றேன்.

பல்வேறு இடப்பெயர்வுகள், மீள்குடியேற்றம், தொடர்ந்த இராணுவப் பிரசன்னம், தமிழர்களின் பாரம்பரிய பகுதிகளில் பெரும்பான்மையினரின் அரச குடியேற்றங்கள் போன்ற பல்வேறு சவால்கள் ஊடாக நீண்ட கால இலக்குடன் கூடிய நிலையான அபிவிருத்தியை நோக்கியே நாங்கள் சென்று கொண்டிருக்கின்றோம் என்பதில் எமது உறுப்பினர்களுக்கு சந்தேகம் தேவையில்லை.

வடமாகாண மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை உள்வாங்கி எமது மக்களுக்கான வாழ்வாதார நடவடிக்கைகளை அதிகரிக்கச் செய்து தேசிய ரீதியில் எமது மாகாணம் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வழங்கியுள்ளது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இம் மாகாணமானது 2016ம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.2 சதவிகிதப் பங்களிப்பினை பதிவு செய்துள்ளது. குறித்த 4.2 சதவிகிதப் பங்களிப்பில் எமது விவசாயத் துறையானது 12.6 சதவிகித பங்களிப்பினையும், கைத்தொழில்த் துறையானது 24.6 சதவிகித பங்களிப்பினையும், சேவைத் துறையானது 54.4 சதவிகித பங்களிப்பினையும், ஏனையவை 8.4 சதவிகிதப் பங்களிப்பினையும்வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சுற்றுலா உணவகங்கள் கைத்தொழில்த் துறையினுள் அடங்குவன. கல்விக் கூடங்கள், வைத்தியசாலைகள் போன்றவை சேவைத் துறையினுள் அடங்குவன.

2017ம் ஆண்டின் விபரங்கள் இன்னமும் தயார்ப்படுத்தப்படவில்லை. ஆனால் அரசாங்கத்தின் தேசிய கொள்கை பிரகடனத்திற்கமைவாக 2017 ம் ஆண்டு வறுமை ஒழிப்பு ஆண்டாகவும் 2018ம் ஆண்டானது தேசிய உணவு உற்பத்தி வருடமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. 2018 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினூடாக அரச, தனியார்துறைகளில் வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கக்கூடிய செயற்றிட்டங்கள் மற்றும் வருமான வாய்ப்புக்களை உருவாக்கக்கூடிய துறைகளில் முதலீடுகளை ஊக்குவித்தல், மக்களின் வாழ்வாதாரத்தினை அதிகரிக்கக்கூடிய வகையிலான பெறுமதிசேர் உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளூடாக வருமானத்தினை அதிகரிக்கச் செய்தல் மற்றும் கிராமிய சமூகப் பொருளாதார உட்கட்டமைப்புக்களை விருத்தி செய்தல் போன்றவற்றினூடாக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு எமது மாகாணம் அதிகரித்த பங்களிப்பினை வழங்குவதற்கு ஏற்ற வகையில் அபிவிருத்திக்கான இலக்குகள் துறைசார் ரீதியாக இனங்காணப்பட்டுள்ளன. எமது தனித்துவத்தைப் பேணிக் கொண்டு முழுநாட்டின் அபிவிருத்தியில் பங்கேற்பதிலே நாம் கண்ணுங் கருத்துமாக உள்ளோம்.

ஆனால் 2016 ம் ஆண்டு நாட்டின் மொத்த வேலையற்றோர் தொகை 4.4 சதவிகிதமாக காணப்படுகையில் வடமாகாணம் ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுமிடத்து ஆகக் கூடுதலான வேலையற்றோர் தொகையாக 6.3சதவிகிதத்தினைப் பதிவு செய்துள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றேன். மேலும் இலங்கையின் வறுமை நிலையினை நோக்கும் போது தலைக்குரிய வறுமைச்சுட்டி 4.1 சதவிகிதமாகக் காணப்பட்டபோதும் வடமாகாணத்திற்கான தலைக்குரிய வறுமைச்சுட்டியானது ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடப்படுமிடத்து ஆகக் கூடுதலான

(05ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
புதன், 13 டிசெம்பர் 2017 ethirolimedia@gmail.com

## உறிஞ்சப்படும் தமிழர் வளம்

வடக்கின் வளங்களை, மத்திய அரசாங்கம் திட்டமிட்டுச் சூறையாடி வருவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், 2018 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு உரையின் போது தெரிவித்திருக்கிறார். எமது உள்ளூர் வளங்களையும் இயற்கை சமநிலையையும் பேணுவதைக் கவனத்திற்கெடுக்காது வருமானம் ஈட்டுவதை மட்டுமே மத்திய அரசு குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்றும் அவர் இதன்போது சாடியுள்ளார்.

மத்திய அரசின் மிக முக்கியமான கொள்ளை ஒன்றையும் அவர் இதன் போது போட்டுடைத்துள்ளார். வடக்கு மாகாண சபையிடம் எவ்வித ஒப்புதலும் பெறாமல், வடக்குக் கடலில் நீர்வாழ் உயிரினச் செய்கைக்காக கரையோர உவர் நீர்ப் பிரதேசங்களை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு வர்த்தமானியில் பிரகடனப்படுத்தியுள்ளது. இப்படிச் செய்வதன் மூலம் குறித்த பகுதிகளில் பாரம்பரியமாக தொழில் செய்து வரும் தமிழ் மீனவக் குடும்பங்கள் அந்தப் பகுதிகளில் கடற்றொழில் செய்வது தடுக்கப்படும். அத்துடன் ஏதேனும் ஒரு தனியார் நிறுவனத்துக்கு நல்ல கொழுத்த தொகையைக் கறந்துவிட்டு, கடலட்டை பிடிக்க அனுமதி கொடுக்கப்படவுள்ளது.

இதுவே ஒரு சிங்களப் பிரதேசத்தில், மாகாண அரசின் அனுமதியின்றின்றி, வர்த்தமாணியில் ஒரு அறிவிப்பைப் பிரகடனம் செய்துவிட்டு, அந்தப் பகுதியில் இருக்கும் மீனவர்களைக் கடலுக்குள் இறங்கக் கூடாது என்று தடை போட முடியுமா? அவ்விதம் செய்தால் அடுத்த கணமே மகிந்த தொடக்கம் ஞானசார தேரர் வரை களத்தில் இறங்கி அரசை உண்டு, இல்லை என்றாக்கி விடுவார்கள். ஆனால் தமிழர் பகுதி என்றால் எதுவும் செய்யலாம். யாரும் கேட்கப் போவதில்லை. கேட்கும் தைரியமும் இங்குள்ள அரசியல் கட்சிகளுக்குத் துளியும் இல்லை.

முல்லைத்தீவில் தமிழ் மீனவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த, தொழில் செய்த இடங்களில் அத்துமீறிக் குடியேறி இருக்கும் சிங்கள மீனவர்கள் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகள் மூலம், பகிரங்கமாக அந்தப் பகுதியில் உள்ள மீன்வளத்தை அள்ளிக் கொண்டு இருக்கின்றனர். அதுவும் இராணுவப் பாதுகாப்புடன். இதே வடக்கு மாகாணத்தில் தமது வயிற்றுப்பிழைப்புக்காக, சில சமயங்களில் தமது பாரம்பரிய மீன்பிடியைப் பிரயோகிக்கும் மீனவர்களை 'லபக்' என்று கைது செய்யக் காத்திருக்கிறது கடற்படை. அண்மையில் கூட மன்னாரில் தாழ்வுப்பாடு என்ற இடத்தில் 25 மீனவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டு பெரும் முறுகல் நிலை தோன்றியிருந்தது. ஆனால் அதைவிடவும் மோசமான, கடல் வளத்துக்கே ஊறு விளைவிக்கும் சட்டவிரோத முறைகளில் மீன்பிடிக்க தென்னிலங்கை மீனவர்களை முல்லைத்தீவில் கொண்டுவந்து, இறக்கி விட்டு வேடிக்கை பார்க்கிறது அரசு.

கடல் வளத்தை மட்டுமே மத்திய அரசு சூறையாடுவதில்லை. வன்னிப் பகுதியின் காடுகளை அழிப்பதிலும், அங்குள்ள பெறுமதியான மரங்களை வெட்டி தென்னிலங்கைக்கு கொண்டு செல்லவும் சில கும்பல்களுக்கு அரசு மறைமுக ஆதரவு கொடுத்தே வருகின்றது. சில வருடங்களுக்கு முன்னர் முறிகண்டி, கொக்காவில் காட்டுப் பகுதியை அண்மித்த பிரதேசங்களில் உள்ள காட்டை அழித்து இராணுவக் குடியிருப்பு ஒன்றையும் பேரின அரசு நிறுவியிருந்தது. தென்னிலங்கையில் வாழ்ந்து, ஓய்ந்து போன வளர்ப்பு யானைகளை இரவோடிரவாக வன்னிக் காடுகளில் கொண்டுவந்து விட்டு செல்லும் இன்னொரு தந்திரமும் நடக்கிறது. ஏனெனில் அந்த யானைகளால் இனி வளர்த்தவர்களுக்கு எவ்வித பயனுமில்லை. எனவே லட்சங்களைச் செலவழித்து, அதனைக் கட்டி வளர்க்காமல், வன்னிக் காடுகளில் விட்டால், அது அங்குள்ளவற்றை உண்டு கொஞ்சக் காலம் உயிர் வாழ்ந்து இறந்து போகும். இந்த யானைகள் தான் தமக்கு உணவு கிடைக்காத நேரங்களில் வன்னிக் குடியிருப்புகளுக்குள்ளும், பயிர் நிலங்களுக்குள்ளும் நுழைந்து ஆட்டம் காட்டுகின்றன .

எனவே எல்லாவிதங்களிலும் பலாபலன்கள் அத்தனையையும் உறிஞ்சி எடுப்பதோடு, தமக்கு வேண்டாதவற்றை வீசியெறியும் குப்பைத் தொட்டியாகவும் தமிழர் பகுதிகளைத் தென்னிலங்கை அரசு நோக்குகின்றது.

நமக்கான எதிர்ப்பு அரசியல் செய்யக்கூடிய, மான, ரோசமுள்ள அரசியல் சக்தியின் வெற்றிடம் இருக்கும் வரை பேரினத்தின் இந்த ஆட்டமும் தொடரவே போகின்றது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# 'பிரமிட்' முறை வியாபாரம் சாவகச்சேரி நீதிமன்று தடை

*சாவகச்சேரி, டிசெ. 13*

தென்மராட்சிப் பிரதேசத்தில் "குளோபல் லைவ்ரைல் லங்கா" தனியார் நிறுவனம் மேற்கொண்டு வந்த "பிரமிட்" முறை வியாபாரத்திற்கு சாவகச்சேரி நீதிமன்றம் தற்காலிகத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

சாவகச்சேரி பொலிஸார் நேற்றுத் தாக்கல் செய்த வழக்கை ஆராய்ந்த பின்னரே சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

குளோபல் லைவ்ரைல் லங்கா தனியார் நிறுவனம் "நெற்வேக் மார்க்கெற்றிங்" என்ற போர்வையில் வாடிக்கையாளரைச் சேர்த்து அவர்கள் வேறு வாடிக்கையாளர்களை சேர்க்க வேண்டும் என்ற நிபந்தனையில் வியாபார நடவடிக்கையை செய்கிறது. பண ரீதியாக முகத்தோற்றமளவில் இது பிரமிட் முறையிலான வியாபார நடவடிக்கை என்பதால் குளோபல் லைவ்ரைல் லங்கா தனியார் நிறுவனம் தனது வியாபார நடவடிக்கையைத் தற்காலிகமாக நிறுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது.

நிதி குற்றவியல் விசாரணைப் பிரிவினருக்கும் இந்த விடயம் தொடர்பாக நிறுவனத்தின் பதிவுப் பிரதிகளை அனுப்பி அறிக்கை சமர்ப்பிக்கக் கோருமாறும், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநருக்கு அறிவித்து வாடிக்கையாளர்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் பொதுநலன் கருதி ஏற்ற நடவடிக்கை எடுக்க கடிதங்களை அனுப்புமாறும் பதிவாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. மேலும், இவ்விடயம் தொடர்பாக பொலிஸ் மா அதிபர், வட பிராந்திய பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அறியத்தருமாறு சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பணிக்கப்பட்டார்.

அனுமதியளிக்கப்படாத இந்த வியாபார நடவடிக்கைக்கு கூட்டங்களை நடத்த மண்டபம் வழங்கிய உரிமையாளர் மற்றும் ஏனைய வசதிகளை செய்துகொடுத்தோரிடம் வாக்கு மூலங்களை பதிவு செய்யுமாறும் பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பிரதேச செயலர், கிராம சேவையாளர்கள் அனைவரும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ச-4)

# கழிவறைக்குப் பூட்டு மக்கள் அசௌகரியம்



*நெல்லியடி, டிசெ.13*

நெல்லியடி பழைய சந்தைக்குள் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த சந்தையில் 3 மலசலகூடங்கள் உள்ள போதும், அவற்றில் இரண்டு உடைந்த நிலையிலும் மற்றையது பூட்டிய நிலையில் உள்ளன. நல்ல நிலையில் உள்ள அந்த ஒரேயொரு மலசல கூடத்தையும், சந்தைக்குள் வியாபாரம் செய்பவர்கள் மட்டுமே பயன்படுத்துகிறார்கள். இவ்வாறு பூட்டப்பட்டுள்ள மலசல கூடத்தை சந்தைக்கு வரும் பொதுமக்கள் அசௌகரியங்களுக்குள்ளாவதாகக் கூறப்படுகின்றது. (அ-11)

### உள்ளூராட்சித் தேர்தல்

# தபால் மூல வாக்களிப்பு காலம் நீடிக்கப்பட்டது

*கொழும்பு, டிசெ. 13*

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால்மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக, மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.எம். மொகமட் அறிவித்துள்ளார்.

93 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள், கடந்த நவம்பர் 28ஆம் திகதியும், ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் டிசெம்பர் 4ஆம் திகதியும் தேர்தல்கள் ஆணைக்குழுவால் கோரப்பட்டிருந்தன.

இந்த நிலையில், மொத்தமுள்ள 341 உள்ளூராட்சி சபைகளுக்குமான



அஞ்சல் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிப்பதற்காக கால எல்லையை டிசெம்பர் 22 ஆம் திகதி வரை நீடித்திருப்பதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மொகமட் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார். (ச)

# மாற்றப்பட்டார் இராணுவப் பேச்சாளர்

*கொழும்பு, டிசெ. 13*

இராணுவத்தின் புதிய ஊடகப் பேச்சாளராக பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து நியமிக்கப்பட்டுள்ளார் என இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து இராணுவப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவப் பேச்சாளராக இருந்த மேஜர் ஜெனரல் றொசான் செனவிரட்ண யாழ்ப்பாணத்தின் 51 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதை அடுத்தே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய இராணுவப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ள பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து 52 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். (ச)

## இன்று நாளும் கோளும்

13.12.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 27 ஆம் நாள்

குளிகை மு.ப. 10.30–12.00 மணி வரை கரணம் மு.ப. 06.00 – 07.30 மணி வரை

இராகுகாலம் 12.00 – 01.30 மணி வரை சுபநேரம் பி.ப. 01.15 – 05.15 எமகண்டம் 07.30 – 09.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தெளிவு | களிப்பு | சினம் | அசதி | கவனம் | பாசம் | சாந்தம் | வரவு | இலாபம் | நலம் | பக்தி | மறதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழில் மீன்மழை

யாழ்ப்பாணம்,டிசெ. 13

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பெய்த மழையுடன், சிறிய அளவிலான மீன்களும் பாரியளவு விழுந்துள்ளன. திடீரெனப் பெய்த மழையுடன் இவ்வாறு மீன்கள் விழுந்ததாக நல்லூர் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கிட்டத்தட்ட 20 நிமிடங்கள் தொடர்ந்து மழை பெய்ததாகவும் அந்தச் சமயமே மழையுடன் மீன்கள் விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னரும் பல தடவைகள் யாழ்ப்பாணத்தில் மீன் மழை பெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)





# மாணவர்களுக்காக மனமிரங்குங்கள்

கொழும்பு,டிசெ.13

இலங்கை பூராகவும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள ரயில்வே சாரதிகள் உட்பட அனைத்து ஊழியர்களிடமும் ஜனாதிபதி விசேட கோரிக்கை ஒன்றை நேற்று செவ்வாய்க்கிழமை விடுத்தார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையெழுதும் மாணவர்கள் மற்றும் பொது மக்களின் சிரமத்தைக் கருத்தில் கொள்ளுமாறு ஜனாதிபதி குறிப்பிட்டார். உயர் கல்விக்காக முக்கிய பரீட்சையில் ஈடுபடும் மாணவர்களின் மனநிலை தொடர்பில் மிகவும் அவதானமாகவிருக்க வேண்டும் என்பதனால் மனிதநேயத் தன்மையுடன் சிந்தித்துக் கடமைகளை நிறைவேற்றுமாறும், பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டுள்ளவர்களின் தீர்க்கப்படாத சிக்கல்கள் இருப்பின் அது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் பேசித் தீர்த்துக் கொள்ள வாய்ப்பு வழங்க முடியும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (எ)



## அமலபால் டிவோஸ் எடுத்த கதையும் நயன்தாரா எப்ப தோஞ்சது எண்ட கதையும்...!

வில்லங்கப்பட்டு முதலியை ஓமெண்ணப் பண்ணிப் போட்டன். காலமை பேப்பர் வாசிக்கேக்கைதான் உந்தக் கதை வந்திது. முதலாவது தொடுகிலும் முதலி மாட்டெண்டிட்டான். "ஆமிக்காரன் என்ன எண்ணெயிலை தாளிச்ச வைக்கிருக்கிறானோ? தெரியேல்லை! நாங்கள் ஆனைக் கோட்டை எண்ணெயைத் தவிர வேறை ஒண்டும் பாவிக்கிறேல்லை. பிறகு வயித்துக்கை குத்தும். நான் உன்னோடை வாறனெண்டாலும் மனுசி என்ன சொல்லுறாளோ தெரியாது, பாப்பம்." எண்டிட்டான்.

"சரி! நான் வந்து உன்ரை மனுசீட்டைப் பிணை நிக்கிறன்டா, நீ வா" எண்டதுந்தான், அப்ப வாறன் எண்டு சொல்லி இருக்கிறான்.

நாங்கள் இரண்டு பேரும் யாழ்ப்பாணம் முத்தவெளிக்கு வாற 15 தொடக்கம் 17வரைக்கும் எந்த நாளும் போறம். சைக்கிளிலை போறதெண்டு தான் தீர்மானம். ஏனெண்டால் சில நேரம் அதை இதைத் திண்டு,கிண்டு செண்டும் வரலாம் எல்லே?

எங்கடை ஆக்கள் எங்கடை விசியம் ஒண்டையும் கொண்டாடுறேல்லை. எங்கடை நல்லது கெட்டதைக் கொண்டாட ஆரேன் பிறத்தியிலை இருந்துதான் வரவேணும். அப்பிடித்தான் முத்த வெளியிலை கோட்டைக்கு முன்னாலை ஒண்டு நடக்கப் போகுது. ஆமிக்காரர் யாழ். உணவுத் திருவிழா ஒண்டைக் கொண்டாடப் போகினம். யாழ்ப்பாண விடுதிகள் சங்கத் தோடை இணைஞ்சு மூண்டு நாளாக் கொண்டாடுறதுதான் அவேன்ரை யோசினை.

இதுக்கிடையிலை எங்கடை ஆக்கள் கத்தினம், என்னெண்டால் வடக்கிலையும், கிழக்கிலையும் சிவில் வேலையிலையும், அடுத்ததா வியாபாரஞ் செய்யிறதிலையும் ஆமி வரப்பிடாது. அவை ஆமியா இருக்கட்டன் எண்டு. இப்ப உணவுத் திருவிழாவை ஏன் இவை செய்யினம். உது உவைக்குத் தேவை இல்லாத வேலை எல்லோ? எங்கடை அலுவலை எங்களுக்குப் பாக்கத் தெரியும். அவை எங்கடை சனத்திட்டை நல்ல பேர் வாங்கச் செய்யிற ஒரு அலுவல் எண்டும் கத்தினம்.

உடனை முதலிக்குக் கோவம் வந்திட்டுது. எங்கடை அலுவலை நாங்கள் செய்யாட்டி ஆரேன்தான் வந்து செய்வினம். உதைத் தடுக்கேலாது. உங்கை சிலபேர் தண்ணியைப் போட்டிட்டு குடும்பத்தைக் கவனியாமை தெருவிலை படுத்துக் கிடக்கினம். அவையின்ரை குடும்பத்தை ஆரேன்தானே பாக்கினம்.? அப்பிடித்தான் உந்தக் கதையும்.

எங்களிட்டை இருக்கிற நல்லதை நாங்கள் கொண்டாடுறேல்லை. எங்களிட்டை இருக்கிற கெட்டித்தனத்தை நாங்கள் மதிக்கிறேல்லை. உலகத் தமிழருக்கை சாதனை படைச்ச எத்தினை பேர் எங்களுக்கை இருக்கினம். ஆருக்கேன் தெரியுமோ? எண்டு கேட்டுப்பாருங்கோ!

நோபல் பருசுக்கு சமமா ஒரு பொம்பிளை விருது எடுத்திருக்கிறா. ஆருக்குந் தெரியுமே? குவாலியர் விருது எடுத்தவவும் இஞ்சை இருக்கிறா, ஆருக்குந் தெரியுமே? உயரம் பாயிறதிலை தேசிய விருது எடுத்த பிள்ளையை ஆருக்கேன் தெரியுமே? தமிழ் கலைக்களச்சியத்தை உருவாக்கினவர் எங்கடை ஆள் ஆருக்கேன் தெரியுமே? சிவபூமியிலை படிக்கிற மாற்றுத் திறனாளிப் பிள்ளையள் ஒலிப்பிக்கிலை வெண்டிட்டு வரேக்கை அவைக்குச் செங்கம்பள வரவேற்பு தெற்கிலை செய்தவை, அது ஆருக்கேன் தெரியுமே?

இது தெரியாத எங்களுக்கு ரஜனி காந்துக்கு எப்ப தடிமன் காச்சல் வந்தது எண்டு தெரியும்! விஜய்க்கு எப்ப நாரிப்பிடிப்பு வந்ததெண்டு தெரியும்! அஜித் எப்ப படப்பிடிப்புக்குப் போகாமல் அலுப்பிலை வீட்டை படுத்திருந்தவர் எண்டது தெரியும்! அமலபால் டிவோஸ் எடுத்ததும், நயன்தாரா எப்ப தோஞ்சது எண்டும், அண்ணாத்துரை எத்தினை நாள் ஓடினது எண்டதும் தெரியும். ஆனால் மேலை நான் சொன்ன விசியம் ஒண்டும் தெரியாது.

ஏன் நேற்றைக்கு நடந்த பகிடி தெரியுமே? ரீவி யிலை ஒரு பேட்டி. வரதராஜப் பெருமாளை இருக்க வைச்சுக் கேளாத கேள்வியைக் கேக்கிறார் ஒரு பேப்பர் காரார். பக்கத்திலை நிண்டதொண்டு என்னைத் தட்டி "உது ஆரை வைச்சுக் கேள்வி கேக்கிறாங்கள்" எண்டு என்னைக் கேக்கிறார். இத்தினைக்கும் அவர் வீட்டிலை எலக்சன் கேக்க ஓடித் திரியிறார். உதை நான் சும்மா சிரிக்கிறதுக்காச் சொல்லுறன் எண்டு நினைக்காதையுங்கோ! அம்மாவாணை உப்பிடி நடந்ததெண்டது உண்மை.

அப்ப இவ்வளவும் செய்து போட்டு துண்டைக் காணேல்லை, துணியைக் காணேல்லை எண்டு ஓடின வரதராஜப் பெருமாளை, ஒருதன் ஆரேண்டு தெரியாமல் எலக்சனிலை நிக்கிறானெண்டால்? எங்கடை எதிர்காலம் என்னவா இருக்கப் போகுது எண்டு பயமாக் கிடக்கு. என்ரை கதிர்காமத்தானே! செல்லச் சந்நதியானே! என்ரை இனத்தைக் காத்துவிடு முருகா! "என்ரை ஐயோ" எண்டு கத்த வேணும்போலை கிடக்கு....????

- வில்லங்கம் விநாசி

# புன்னாலைக்கட்டுவன் சிறுமி மீட்பு கடத்தியவருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ். புன்னாலை கட்டுவன் பகுதியைச் சேர்ந்த 13 வயது சிறுமி ஒருவர் கடத்திச் செல்லப்பட்ட நிலையில் வவுனியாவில் வைத்து நேற்று மீட்கப்பட்டார்.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்றம்நேற்று உத்தரவு பிறப்பித்தது.மேலும் "கடந்த 5ஆம் திகதி குறித்த சிறுமியை அவரது உறவினர் ஒருவர், சிறுமியின் பெற்றோருக்குத் தெரியாமல் அழைத்துச் சென்று வவுனியாவில் உள்ள தனது வீட்டில் தங்க வைத்துள்ளார். இந்த நிலையில், சிறுமியைக் காணாத பெற்றோர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். பின்னர் சிறுமியை உறவினர் அழைத்து சென்று வவுனியாவில் தங்க வைத்திருப்பதைப் பெற்றோர் அறிந்துகொண்டனர். தொடர்ந்து குறித்த உறவினர்களைக் கைது செய்த சுன்னாகம் பொலிஸார், சிறுமியை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.எவ்வாறாயினும், சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உட்டுபடுத்தப்படவில்லை என்பது வைத்திய பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டிருப்பதோடு குறித்த சந்தேகநபரை நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் 22ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (எ)

# 23 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், டிசெ.13

எல்லையை மீறி மீன்பிடியில் ஈடுபட்ட 23 இந்திய மீனவர்கள் கச்சதீவு மற்றும் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டதாகக் கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மீனவர்களிடம் இருந்து 5 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, கைதுசெய்யப்பட்ட 23 மீனவர்களையும் யாழ். கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னைடுக்கப்பட்டுள்ளது. (எ)

# வாசகர் வட்டத்தின் விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.13

யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டம், 'ஈழத்துத் திரைப்பட நூல்கள் நான்கு' என்னும் தலைப்பில் விமர்சன அரங்கை ஒழுங்குசெய்துள்ளது.

பொதுசன நூலக குவிமாடக் கேட்போர் கூடத்தில், எழுத்தாளர் அ. யேசுராசா தலைமையில், எதிர்வரும் சனிக்கிழமை மாலை மூன்று மணிக்கு, நடைபெறவுள்ள இவ்வரங்கில் - கே. எஸ். சிவகுமாரனின் 'அசையும் படிமங்கள்' பற்றி சி. விமலனும், தம்பிஐயா தேவதாஸின் 'இலங்கைத் தமிழ் சினிமாவின் கதை' பற்றி ராதேயனும், அ. யேசுராசாவின் 'திரையும் அரங்கும்: கலைவெளியில் ஒரு பயணம்' பற்றி கோ. கேதாரநாதனும், இ. சு. முரளிதரனின் 'தமிழ் சினிமாவின் பார்வையில் ஈழம் வணிகமாக்கப்பட்ட வலிகள்' பற்றி ஜெ. கி. ஜெயசீலனும் விமர்சன உரையாற்றுவார்கள். ஆர்வமுள்ள அனைவரையும் பங்குபற்றுமாறு வாசகர் வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

# உத்தரவாதமோ 100 வருடம் ஒரு மாதத்திலேயே பாலம் சேதம்

கிளிநொச்சி,டிசெ.13

கிளிநொச்சி வண்ணாத்தி ஆற்றுக்குப் போடப்பட்ட பாலத்தை நூறு வருடங்களுக்கு மேல் பயன்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும், ஒரு மாதத்துக்குள் குறித்த பாலம் சேதமடைந்துள்ளது.

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேசச் செயலாளர் பிரிவின் கீழுள்ள மக்கள், உருத்திரபுரம் வீதியின் வண்ணாத்தி ஆற்றுக்குப் புதிய பாலமொன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கைக்கமைவாகவே குறித்த பாலம் ஆயிரம் கிராமப் பாலங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் பல மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. ஆயினும் ஒரு மாதகாலத்துக்குள்ளேயே இந்தப் பாலத்தின் இரு பக்கங்களிலும் போடப்பட்ட கொங்கிறீட் தளங்கள் உடைந்து பாவனைக்குதவாத நிலையில் காட்சியளிக்கின்றன. இதனால் அப்பகுதி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். (அ)

# ஈ.பி.டி.பி வேட்புமனு



யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ். சாவகச்சேரி நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை ஈ.பி.டி.பி.யினர் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்தனர்.

அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஈ.பி.டி.பி சார்பில் சாவகச்சேரி தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஆகியோர் தங்கள் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர். யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அகிலனிடம் ஈ.பி.டி.பியின் செயலாளர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வேட்பு மனுவைக் கையளித்ததுடன், வேட்பாளர்களையும் தெரிவத்தாட்சி அலுவலகரிடம் அறிமுகம் செய்து வைத்தார். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli



# வடக்கைச் சுரண்டி வளங்களை சூறையாடும் மத்திய அரசின் முயற்சிக்கு இடமளியோம்

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

வறுமைச்சுட்டி 7.7 சதவிகிதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. வடமாகாணத்தின் வறுமை நிலையினை நோக்கும் போது 2016ஆம் ஆண்டின் தரவுகளின் பிரகாரம் நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் வறுமை அதிகூடிய மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் அதாவது 18.2சதவிகித வறுமைக் குறிகாட்டியை பதிவு செய்து முதலாவது நிலையிலும். முல்லைத்தீவு மாவட்டம் 12.7 சதவிகிதம்பதிவு செய்து இரண்டாவது நிலையிலும் யாழ்ப்பாண மாவட்டம் 7.7 சதவிகிதத்தினை பதிவு செய்து 5வது இடத்திலும் காணப்படுகின்றன. வறுமை கூடிய மாவட்டமாக இருந்த முல்லைத்தீவு வறுமையின் தாக்கம் குறைவடைந்து எமது காலத்தில் இரண்டாம் இடத்திற்கு பின்னேறியமை வரவேற்கத்தக்கது. எனினும் கிளிநொச்சி மாவட்டம்கூடிய கவனிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

எனவே வட மாகாணத்தின் பல்வேறு துறைகளிலும் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கக்கூடியதாக அரச தனியார் கூட்டு முதலீடுகளை உருவாக்கி வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்வதும், சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கூடாக மக்களின் வருமானத்தினை அதிகரிக்கச்செய்வதும் இவ் வரவுசெலவுத்திட்டத்தினூடாக அடையப்படவேண்டிய இலக்குகளாக உள்ளன.

வட மாகாணம் தனது உள்ளக வள வாய்ப்புக்கள் ஊடாக வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல், மக்களுக்கான வருமான மட்டத்தினை அதிகரிக்கச் செய்தல், கிராமிய பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்தல், மாகாண மட்டத்தில் உணவுப்பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், சிறிய நடுத்தர விவசாயிகள் மற்றும் முயற்சியாளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தி ஊக்குவித்தல், சிறிய நடுத்தர முயற்சியாளர்களது திறன்களை விருத்தி செய்தல், சுற்றுலா கைத்தொழிலை ஊக்குவித்தல், வறுமைத்தணிப்பு திட்டங்களை அமுலாக்குதல், போதைப்பொருட்களின் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், சிறுநீரக நோய்த் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல், போசாக்கு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல் போன்றவற்றில் கவனம் செலுத்தி வருகின்றது. மற்றும் மனிதவள மேம்பாட்டினை நோக்காகக் கொண்டு கல்வி மற்றும் சுகாதாரத்துறைகளுக்கு பொருத்தமான அபிவிருத்தித்திட்டங்கள் போன்ற முக்கியமான விடயங்களில் 2018ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் கவனம் செலுத்த முனைந்துள்ளது.

மேலும் 70ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் பரிந்துரைகளுக்கு அமைவாக 2030ஆம் ஆண்டில் அடைய எதிர்பார்க்கப்படும் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளையும் (SDG) கவனத்திற்கொண்டு எமது அபிவிருத்திப் பாதையை நோக்கி நாம் பயணிக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். மத்திய அரசாங்கமும் அதற்கனுசரணையாகச் செயற்பட முன்வரும் என்று எதிர்பார்க்கின்றோம்.

வடமாகாணத்தின் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை பயனுறுதிமிக்கதாகவும், வினைத்திறனுடையதாகவும் செயற்படுத்துவதற்கு ஆளணிகள் இன்றியமையாததாகும். வடமாகாணத்திற்கு தேவைப்படும் ஆளணிகள் தொடர்பாக சேவைப் பிரமாணக் குறிப்புக்களைத் தயாரித்து மாகாண சபைக்குட்பட்ட வெற்றிடங்களை முறையே நிரப்புவது இன்றியமையாததாகும். அந்த வகையில் அடையாளப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள் பல்வேறு பதவி நிலைகளிலும் நிரப்பப்பட்டுள்ளன. இதேவேளை மத்திய அரசின் கீழ்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய தேவை உள்ளது. எனவே 2018ம் ஆண்டு மத்திய–மாகாண அரசுகளின் கீழ் இனங்காணப்பட்டுள்ள ஆளணிப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வது இன்றியமையாததாகும்.

## விவசாயத்துறை

வடமாகாணத்தின் முக்கிய துறைகளை கவனத்திற்கொள்ளும்போது விவசாயத்துறையில் நெற்செய்கை, உப உணவுப் பயிர்ச் செய்கை மற்றும் பழமரச் செய்கை ஆகியவற்றில் அதிகளவு வெளியீட்டுத்தன்மையை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தரமான உயர்ந்த இனவிதை வகைகள், நவீன தொழிநுட்ப வசதிகள், காலத்தின் தேவைக்கேற்ப விவசாயிகள், விவசாயத்துறை அலுவலர்களிற்கான வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உட்கட்டுமான வசதிகளின் விருத்தி ஆகியவற்றின் மூலம் 2017ம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. அத்துடன் உவர் நிலங்களில் நெற் செய்கையை ஊக்குவித்தல், நெல்லின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், சேதன நெற் செய்கையை ஊக்குவித்தல் மற்றும் தரமான விதை நெல் உற்பத்தி ஆகிய செயற்பாடுகளும் விவசாயத்துறையின் வளர்ச்சிக்கு உதவியளித்துள்ளன. இவற்றை விட வீட்டுத் தோட்ட செயல்திட்டத்தின் மூலம் வறிய விவசாயக் குடும்பங்களது வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கான ஊக்குவிப்பு செயற்றிட்டங்களும் அமுலாக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் விவசாயிகளும் விவசாய அமைப்புக்களும் பல்வேறு நன்மைகளைப் பெற்றுள்ளனர்.

2018ம் ஆண்டு தேசிய உணவு உற்பத்தி வருடமாக பிரகடனப்படுத்தப்பட்டதற்கமைவாக பல்வேறு அபிவிருத்தி திட்டங்களையும் உள்வாங்கி உற்பத்தி அதிகரிப்பினூடாக விவசாயிகளின் வருமானத்தினை அதிகரித்து மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கூடுதலான பங்களிப்பினை வடமாகாணத்தின் விவசாயத் துறையானது செலுத்தும் என எதிர்பார்க்கின்றோம்.

## கால்நடை அபிவிருத்தித் துறை

வடக்கு மாகாணத்தில் கால்நடை அபிவிருத்தியை பொறுத்தளவில் 2017 மிகவும் அதிக வளர்ச்சியை அடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. கிராம மட்ட மக்களால் அதிகம் விரும்பப்படும் வாழ்வாதார துறையாக கால்நடை உற்பத்தித்துறை உருவாகி வருகின்றது. முக்கியமாக இத்துறையானது 2017 இல் காணப்பட்ட வரட்சி நிலைமையிலும் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்திகளில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிப்பைக் காட்டியுள்ளது. குறிப்பாக 2016ம் ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டின் நாளாந்த பாலுற்பத்தி ஏறத்தாழ 25,000 லீட்டர்களினால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு பால் விற்பனை மூலமாக மட்டும் ரூபா 2,450 மில்லியன் வருவாய் பண்ணையாளர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

2018 ம் ஆண்டுக்கான வடக்கு மாகாண இலக்குகளாக நாளொன்றுக்கு பாலுற்பத்தி 130,000 லீட்டர்களாகவும், முட்டை உற்பத்தியினை 100,000 முட்டைகளாகவும் இறைச்சி உற்பத்தியினை 35,000 கி.கி ஆகவும் உயர்த்தும் முகமாக பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

2018ம் ஆண்டு கால்நடை உற்பத்திகள் மூலமான பண்ணையாளர்களின் வருவாயினை மேலும் 15 சதவிகிதம் அதிகரிப்பதற்கு ஏதுவாக கால்நடை உற்பத்திகளை இறக்குமதி செய்வதனை இயன்றளவுக்கு குறைத்துக்கொள்ளும் வகையிலும் அதிகளவில் வர்த்தக ரீதியிலான கால்நடை பண்ணைகளை உருவாக்கும் வகையிலும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

## நீர்ப்பாசனத் துறை

விவசாயம் மற்றும் கால்நடை ஆகிய துறைகளை மேலும் வலுவூட்டக்கூடிய வகையில் நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்தியும் முக்கிய பங்காற்றுவதை இவ்விடத்தில் கூறிவைக்க வேண்டியுள்ளது. வட மாகாண சபையின் ஆளுகைக்குட்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் 45 நடுத்தர நீர்ப்பாசன குளங்களும் 09 பெரிய நீர்ப்பாசன குளங்களுமாக 70,181 ஏக்கர் கொண்ட 54 நீர்ப்பாசன குளங்களும் 20,000 ஏக்கர் கொண்ட உப்பாறு, ஆனையிறவு, மற்றும் வடமராட்சி ஆகிய 3 நன்னீர் ஏரித் திட்டங்களும் 34 உவர்நீர்த்தடுப்பு அணைகளும் (7,220 ஏக்கர் கொண்டது) மற்றும் 2,000 ஏக்கர் கொண்ட வழுக்கையாறுத் திட்டமுமாக அனைத்துத் திட்டங்களும் உரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2017ம் ஆண்டில் உள்ளூர் நிதியீட்டத்தின் ஊடாகவும் வெளிநாட்டு நிதியீட்டத்தினூடாகவும் பல்வேறு நீர்ப்பாசன திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு விவசாயப் பயிர்பரவலாக்கம், உற்பத்தி விரிவாக்கம் மற்றும் விலங்கு வேளாண்மை அபிவிருத்தி என்பன மேம்படுத்தப்பட்டு விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வட மாகாணத்தில் பெரிய நீர்ப்பாசனத் திட்டமான இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம், முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திட்டம், வடமராட்சி நீரேரரியினை நன்னீர் ஏரியாக மாற்றுந் திட்டம், தொண்டைமானாறு தடுப்பணை போன்றவையும் விவசாய மற்றும் கால்நடைத்துறைகளை மேம்படுத்துவதற்கான சிறப்பான திட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். எதிர்காலத்திலும் இவை அனைத்தும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உறுதுணையாக அமையும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை.

## கல்வித் துறை

வடமாகாணத்தில் கல்வித்துறையினை நோக்கும் போது பல்வேறு நிதிமூலங்களூடாக உட்கட்டுமான வசதிகள், நவீன தொழிநுட்ப வசதிகளை உட்புகுத்தல், தளபாடங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கல் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான கல்வித்துறைசார் வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல்வேறு செயற்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன் குறிப்பிடத்தக்களவில் ஆசிரியர் பற்றாக்குறையும் வருடாந்தம் நிவர்த்தி செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. எனினும் வடமாகாணத்தின் கல்வி நிலையினை ஏனைய மாகாணங்களுடன் ஒப்படும் போது அதிக கவனம்செலுத்த வேண்டிய தேவைப்பாடு இன்றியமையாததாகவுள்ளது. அதற்கான நடவடிக்கைகளைத் தற்போது எடுத்து வருகின்றோம்.

## சுகாதாரத் துறை

சுகாதாரத்துறையும் வடமாகாணத்தின் அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றுகின்றது. 2017ம் ஆண்டு வரவு–செலவுத்திட்டத்தினூடாக வைத்தியசாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள், கிராமிய சுகாதார நிலையங்களின் அபிவிருத்தி, மருத்துவர்கள் மற்றும் தாதிகளுக்கான விடுதிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களுக்கான உட்கட்டுமான அபிவிருத்திகள், மருத்துவ உபகரணங்கள், நோய்த் தடுப்புக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் சுகாதாரத்துறை மேம்பாட்டுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு இம்மாகாணத்தின் சுகாதாரக் குறிகாட்டிகள் முன்னேற்றம் அடைந்திருப்பதை காணக்கூடியதாகவுள்ளது. எதிர்காலத்தில் வடமாகாணத்தின் சுகாதாரத்துறை மேம்பாட்டினை தொடர்ச்சியாகப் பேணும் வகையில் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எனினும் டெங்கு நோய்த் தடுப்பு மிக முக்கியமான ஒரு விடயமாகப் பரிணமித்துள்ளது. அதன் பரவலைக் கட்டுப்படுத்த யாவரும் சேர்ந்து நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம்.

## வீதி அபிவிருத்தித் துறை

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதியளிப்புக்களுக்கூடாக வட மாகாணத்தின் வீதி அபிவிருத்திச் செயற்பாடுகளும் கணிசமான அளவு முன்னேற்றம் அடைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இருப்பினும் வடமாகாணத்தில் காணப்படும் C மற்றும் D தரத்திலான 1,500 கிலோ மீற்றர் வரையான வீதிகள் புனரமைக்க வேண்டியிருப்பதுடன் 8,000 கிலோ மீற்றர் வரையான கிராமிய வீதிகளும் புனரமைக்கப்படவேண்டியுள்ளது. 2018 ம் ஆண்டு வீதி அபிவிருத்திப் பணிகள், கிராமியப்பாலங்கள் அமைத்தல் போன்றவற்றிற்கான முதலீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

## சுற்றுலாத்துறை, வீடமைப்புத் துறை

சுற்றுலாத்துறை, வீடமைப்பு போன்றவற்றுக்கான அதிக தேவைப்பாடுகள் காணப்படினும் எமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதிமூலம் சிறிய அளவிலதான தேவைப்பாட்டினையே எம்மால் பூர்த்தி செய்ய முடிகின்றது. இவற்றிற்காக இனங்காட்டப்பட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

நேரங்கருதி மேற்படி துறைகள் உள்ளடக்கிய முதலமைச்சரின் அமைச்சு பற்றி இத்தருணத்தில் குறிப்பிடாது விடுகின்றேன். அதன் பாதீட்டு விவாதம் இன்று நடைபெற இருக்கின்றது. எமது அமைச்சின் வரவு செலவுத் திட்டம் அப்போது ஆராயப்படும்.

எனினும் எமது அமைச்சுக்கள் அண்மையில் தேசிய ரீதியாகப் பெற்ற சில விருதுகள் பற்றி சுருக்கமாகக் கூற விரும்புகின்றேன்.

## நிதி முகாமைத்துவத்தின் செயலாற்றுகை மதிப்பீடு

எமது வடமாகாண சபையின் கீழ் செயற்படுகின்ற இரண்டு அமைச்சுக்கள், மற்றும் 05 திணைக்களங்கள் மற்றும் 05 உள்ளூராட்சி சபைகள் அண்மையில் பாராளுமன்ற பொது கணக்குகள் குழுவால் அறிமுகப்படுத்தப்பட்ட இணைய மயப்படுத்தப்பட்ட கணனி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி முகாமைத்துவத்தில் அதிஉயர் செயற்திறனை வெளிப்படுத்தியமைக்காக மாண்பு மிகு ஜனாதிபதி அவர்களினால் தங்க விருதுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும் பாதீட்டின் அதன் வினைத்திறனான நடைமுறைப்படுத்தலினாலேயே (Effective implementation) உரிய தரப்பினர்களுக்கு பலா பலன்கள் சென்றடைவதை உறுதிப்படுத்த முடியும். எனவே செயலாற்றுகை குறிகாட்டிகளை திறம்படக் கணித்து அந் நியமங்களுக்கேற்ப அதனை அடைவதனை நோக்காகக் கொண்டு செயற்படவேண்டியுள்ளது. இந்த வகையில் எமது வடமாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் முன்மாதிரியாக திகழ்ந்ததையிட்டு பாராட்டுவதுடன் ஏனைய திணைக்களங்களும் அமைச்சுக்களும் உயர் செயற்திறனை வெளிப்படுத்தி நிதி முகாமைத்துவத்தினையும் அதன் வகை சொல்லும் பொறுப்பினையும் (Accountability) செவ்வனே நிறைவேற்ற வேண்டிய நிலையில் அவை உள்ளன என்பது வெள்ளிடைமலை.

நாடளாவிய ரீதியில் 831 நிறுவனங்களது 2015ம் ஆண்டுக்கான செயலாற்றுகை மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றுள் அதியுயர் செயலாற்றுகையை வெளிப்படுத்திய 81 நிறுவனங்களுள் எமது வடமாகாண சபையின் கீழ் தங்க விருதுகளைப் பெற்ற அமைச்சுக்கள் திணைக்களங்கள் விபரம் முறையே பின் வருமாறு.

1. முதலமைச்சரின் அமைச்சு
2. சுகாதார அமைச்சு
3. பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் – நிதி
4. சுகாதார சேவைகள் நிறுவனம்
5. கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
6. நீர்ப்பாசனத் திணைக்களம்
7. வீதி அபிவிருத்தித் திணைக்களம்

பாராட்டுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட பிரதேச சபைகள்

1. நல்லூர்ப் பிரதேச சபை,
2. பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை
3. கரைத்துரைப்பற்று பிரதேசசபை
4. மன்னார் பிரதேசசபை
5. வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை

சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்த அலுவலர்களின் அர்ப்பணிப்புள்ள சேவை காரணமாகவே இது சாத்தியமானது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் எமது பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடுத்து 2018ம் ஆண்டுக்கான வருடாந்த நிதிக் கூற்றை சமர்ப்பிக்கின்றேன்.

ஒவ்வொரு நிதியாண்டினதும் வருடாந்த நிதிக் கூற்றானது 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைகள் சட்டத்திற்கு அமைவாக, சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்படுதல் வேண்டும். இதன் அடிப்படையில் இச்சபையில் 2018 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு நியதிச் சட்ட வரைவை வருடாந்த நிதிக் கூற்றுடன் சமர்ப்பிக்கின்றேன்.

2018 ஆம் நிதியாண்டிற்கான எமது மாகாணசபை செலவினங்களுக்காக நிதி ஆணைக்குழுவால் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்குச் சிபார்சு செய்யப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை உள்ளடங்கலாக 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றின் ஒதுக்கீட்டு தொகைகள் பின்வருமாறு:

01. மீண்டுவரும் செலவினங்கள் (ரூபா.22,910.93 மில்லியன்)

அ) மீண்டுவரும் செலவினங்களுக்கான தொகை ரூபா. இருபத்திரண்டாயிரத்து எழுநூற்று எழுபது தசம் ஒன்பது மூன்று மில்லியன் (ரூபா 22,770.93மில்லியன்) ஆகும். இதில் மத்திய அரசால்

தொகுதிக் கொடையாக ரூபா பதினெட்டாயிரத்து அறுநூற்று ஐம்பது தசம் ஒன்பது மூன்று மில்லியனும் (ரூபா.18,650.93மில்லியன்)

மத்திய அரசு வருமானமாக ரூபா இரண்டாயிரத்து எழுநூற்று ஐம்பது மில்லியனும் (ரூபா.2,750 மில்லியன்)

மாகாணசபை வருமானமாக ரூபா எழுநூற்று ஐம்பது மில்லியனும் (ரூபா.750மில்லியன்) கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாற்றுவதற்கான

*முத்திரைத் தீர்வைக் கட்டணம் – ஷரூபா நாநூற்று எண்பது மில்லியன் (ரூபா.480மில்லியன்)

நீதிமன்ற தண்டப்பணம் – ரூபா நூற்று நாற்பது மில்லியன் (ரூபா.140 மில்லியன்)

ஆ) உள்ளூராட்சி மன்றங்களுக்கான முத்திரைத் தீர்வைக் கட்டண மீளளிப்பு (ரூபா.140 மில்லியன்)

மேலும் 2017 ஆம் ஆண்டு வரை உள்ளூராட்சி மன்றங்களின் பொருட்டு சேகரிக்கப்பட்ட முத்திரைத் தீர்வைக் கட்டணத்தினை உரிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு 2018 ஆம் ஆண்டில் மாற்றல் செய்வதற்கு நிதி ஆணைக்குழுவின் சிபார்சு ரூபா 480 மில்லியனுக்கு மேலதிகமாக ரூபா 140 மில்லியன் 2018 ம் ஆண்டு நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

02. மூலதனச் செலவினங்கள் (ரூபா 3,843.12 மில்லியன்)

அ. மூலதனச் செலவினங்களுக்கான தொகை ரூபா மூவாயிரத்து எண்நூற்று இருபத்து மூன்று தசம் ஒன்று இரண்டு மில்லியன் ஆகும். (ரூபா.3,823.12 மில்லியன்) இதில்

பிரமாண அடைப்படையிலான கொடை (CBG) – ரூபா ஐநூற்று ஐம்பத்தொன்று தசம் இரண்டு மில்லியன் (ரூபா.551.2 மில்லியன்)

மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை (PSDG) – ரூபா இரண்டாயிரத்து எண்நூற்று இருபத்தொன்பது தசம் எட்டு ஏழு மில்லியன் (ரூபா.2,829.87 மில்லியன்)

பாடசாலைக் கல்வியை ஓர் அறிவு மையத்தின் அடிப்படையாக மாற்றும் செயற்றிட்டம் (TSEP)- ரூபா ஐம்பத்து ஐந்து மில்லியன் (ஷரூபா.55 மில்லியன்)

சுகாதாரத் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் – ரூபா முந்நூற்று இருபத்து நான்கு தசம் எட்டு மில்லியன் (ரூபா.324.80 மில்லியன்)

ஆ. வெளிநாட்டு உதவித் திட்டங்களுக்கான ஒதுக்கீடு ரூபா அறுபத்திரண்டு தசம் இரண்டு ஐந்து மில்லியன் (ரூபா.62.25 மில்லியன்) ஆகும். இதில்

வடக்கு வீதி இணைப்புத்திட்டம் (மேலதிக நிதியிடல்) – ரூபா பதினேழு தசம் இரண்டு ஐந்து மில்லியன் (ரூபா.17.25 மில்லியன்)

பொதுக் கல்வி நவீனமயமாக்கல் கருத்திட்டம் – ரூபா நாற்பத்தைந்துமில்லியன் (ரூபா.45 மில்லியன்)

இ. காற்றாலைத் திட்டத்தின் படி விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு கொடை (CSRG) ரூபா.20 மில்லியன் (ரூபா.20 மில்லியன்) 2018 ஆம் ஆண்டு செயற்திட்டங்களை நிறைவேற்று வதற்காக நிதிக்கூற்று 2018 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும், கிடைக்கப்பெற்ற மேற்படி ஒதுக்கீட்டுத் தொகைகளிற்கு அமைவாக மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ரீதியாக அவற்றின் முன்னுரிமைத் தேவைகளைப் பொறுத்து வருடாந்த நிதிக்கூற்று வரைவு தயாரிக்கப்பட்டு இச்சபை முன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

எனவே கௌரவ அவைத்தலைவர் அவர்களே,

சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டுக்கான வரைவு ஒதுக்கீட்டு நியதிச் சட்டம் மற்றும் வருடாந்த நிதிக்கூற்றை அங்கீகரித்து உதவுமாறு சபையினை மிக வினயமாக கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி

வணக்கம்

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்

முதலமைச்சர்

வடமாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஐ.தே.க.வும் கட்டுப்பணம் செலுத்தியது

யாழ்ப்பாணம், டிசெ.13

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சாவகச்சேரி நகரசபையில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி கட்டுப் பணத்தை நேற்று செவ்வாய்க்கிழமை செலுத்தியது.

ஐ.தே.கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரன் தலைமையில் குறித்த கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இவருடன், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர்கள் உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து கட்டுப்பணத்தினைச் செலுத்தினார்கள். யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள உதவித் தேர்தல் ஆணையாளர் அகிலனிடம் இவர்கள் தமது கட்சி சார்பில் கட்டுப்பணத்தினைச் செலுத்தி வேட்பாளர் விண்ணப்பப்படிவத்தையும் பெற்றுள்ளனர். (ச)

# மைத்திரி-மகிந்த இணைவு சாத்தியமே!

கொழும்பு, டிசெ.13

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவடைந்த பின்னர் ஆட்சியமைக்கும் போது பரஸ்பர இணக்கப்பாட்டுடன் செயற்படுவது குறித்து மைத்திரி - மகிந்த அணியினர் இரகசியமாகப் பேச்சு நடத்தி வருகின்றனர் என நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவிக்கப்பட்டது.

ஏற்கெனவே, இவ்விருவரையும் இணைக்கும் பேச்சுக்கள் தீவிரமாக இடம்பெற்று வரும் நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ள அதேநேரம், உள்ளூராட்சி சபைத் தேர்தல் நெருங்குவதால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு அணியினரை மற்ற அணியினர் விமர்சிக்கக்கூடாதென்றும், இன்னொரு தரப்பைப் பாதிக்கும் வகையில் பிரச்சாரங்களில் ஈடுபடக்கூடாதென்றும் இருதரப்பினரும் முடிவெடுத்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# இணைப்பு சாத்தியம் இல்லை-மகிந்த

கொழும்பு, டிசெ.13

கூட்டரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறும் வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இணைப்புச் சாத்தியப்படாது என மகிந்த ராஜபக்ச, அத்துரலியே ரதன தேரரிடம் நேற்றுக் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தேர்தலுக்கு முன்னர் ஒன்றிணைப்பதற்குரிய முயற்சியில் இறங்கியுள்ள ரதன தேரர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தினார். எனினும், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் கூட்டு எதிரணியின் முடிவில் இனியும் மாற்றம் ஏற்படாது என மகிந்த கூறியுள்ள நிலையில், ரத்தன தேரர் ஏமாற்றமடைந்துள்ளார். "கூட்டு எதிரணி உறுப்பினர்கள் அனைவரும் தனித்துச் செல்லவேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளோம். எனவே என்னை நம்பி வந்தவர்களைக் கைவிடமுடியாது. நாம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு மைத்திரி தரப்பிலிருந்து உரிய பதில்கள் கிடைக்கவில்லை. அத்துடன், கட்சியின் செயலாளரும் கடுமையாக விமர்சித்து வருகிறார்" எனத் தெரிவித்தார்.



# நெல்லியடியில் ஞாயிறிலும் வியாபாரம்

நெல்லியடி, டிசெ.13

நத்தார் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் அடுத்த வருடம் ஜனவரி 7 ஆம் திகதி வரை நெல்லியடி வர்த்தக சங்கத் துக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் வியாபாரம் செய்யலாம் என நெல்லியடி வர்த்தகர் சங்கச் செயலாளர் சுரேரஞ்சன் தெரிவித்துள்ளார். (அ-11)

# 50 மில்லியன் நட்டம்



கொழும்பு, டிசெ.13

ரயில்வே பணியாளர்கள் முன்னெடுக்கும் பணிப்புறக்கணிப்புக் காரணமாக, ரயில்வே திணைக்களத்துக்கு 50 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக நட்டம் ஏற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் வணிகப் பிரிவு நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

வழமையாக நாளொன்றுக்கு 350 ரயில் பயண சேவைகள் இடம்பெறுகின்றன. எனினும், பணிப்புறக்கணிப்புக் காரணமாக நாளொன்றுக்கு 20 முதல் 25 வரையான ரயில் பயண சேவைகளே இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே பணியாளர்களின் சேவை புறக்கணிப்பு நேற்று ஆறாவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தொடர்ச்சிகள்

**வடக்கை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வளப்படுத்த வேண்டும், விருத்தி செய்ய வேண்டும், முன்னேற்ற வேண்டும் என்பதிலும் பார்க்க தங்களுக்கு என்ன நன்மை கிடைக்கும் என்றே எதிர்பார்க்கிறார்கள். அதிகாரப் பகிர்வு மூலம் எமக்கு வழங்கிய அதிகாரத்தையும் அவர்களே நடைமுறைப்படுத்துகிறார்கள்.

மக்களின் காணிகளை வனத் திணைக்களம் பிடித்துக் கொண்டு தான்தோன்றித் தனமாக நடக்கிறது. பாரம்பரியமாக கடல் அட்டை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எமது மக்களை விரட்டி விட்டு நிறுவனம் ஒன்றை கொண்டு வந்து கடல் அட்டை வியாபாரத்தில் ஈடுபட அரசு எண்ணுகிறது. தான்தோன்றி தனமாக வருமானம் பெற எங்களைப் பாவிக்கப் பார்க்கிறார்கள்.

எமது வன்னியின் பறவைகள் சரணாலயத்தில் விடுதி, திறந்த விலங்குக் காட்சி சாலை அமைக்கும் திட்டத்துடன் அமைச்சர் ஒருவர் உள்ளார். இவை அமைந்தால் பறவைகள் வருகை குறைவடைவதுடன், மக்களின் பாதுகாப்பும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும். பொருளாதார இலாபங்களுக்காக எமது கலாசாரம், பண்பாட்டை அழிய நாம் விடமாட்டோம்.

பெரும் செயற்றிட்டங்களை நாம் இயற்றவில்லை, பொருளாதார ரீதியாக முன்னேறவில்லை என்பவர்கள் அரசியல் ரீதியாக எமக்கு அதிகாரங்கள் கிடைக்கும் வரை சற்றுப் பொறுமையாக இருக்க வேண்டுகிறேன் - என்றார். (ச)

**விவசாயி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

உயிரிழந்தார்.

விவசாயத்தையே தொழிலாகக் கொண்ட இவர் கடந்த போகத்தில் வெங்காயம் விதைத்திருந்தார். இதில் நஷ்டம் ஏற்பட்டதால் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்தார்.

இதையடுத்துத் தனக்குத் தானே மண்ணெண்ணை ஊற்றித் தீ வைத்துக் கொண்டார். உறவினர்கள் அவரைக் காப்பாற்றி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் மரணமானார். இவரின் பிரேத பரிசோதனையை ந.பிறேம்குமார் மேற்கொண்டு வருகின்றார்.

நஷ்டத்தால் ஏற்பட்ட இந்தத் தற்கொலையால் வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் கடும் துன்ப அலைகளை ஏற்படுத்தியுள்ளது. (ச-11)

**யாழ். ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தமது ஊடகத்தின் ஆதரவு கிடைக்காது என்றும் அவர் கட்சியின் உயர் மட்டத்தை எச்சரித்திருந்தார் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இவரின் எதிர்ப்பால் கோபமடைந்த கூட்டமைப்பின் தலைவர் இவரைத் தொடர்பு கொண்டுள்ளார்.

"மேயர் வேட்பாளர் யார் என்பது கட்சியின் முடிவு. நீர் பேசாமல் இரும்" என்று கடுமையாகக் காட்டியுள்ளார் என உள்வீட்டுத் தகவல் ஒன்று தெரிவித்தது. மேலும் அனேகமாக வித்தியாதரனே மேயர் வேட்பாளராக நியமிக்கப்படலாம் என்றும் அத்தகவல் தெரிவித்தது. (ச)

**கலகலப்பானது... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நேற்று இடம்பெற்ற இந்த சுவாரசியமான உரையாடலால் வடக்கு மாகாண சபையே கலகலப்பானது. இதன் பின்னர் முதலமைச்சர் அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றினார். தொடர்ந்து, உறுப்பினர்களின் விவாதம் இடம்பெற்று நிதி அறிக்கை அங்கீகரிக்கப்பட்டது. (ச)

**டில்லு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

சிறையும், விஜயரத்தினம் ஜனுசன், ஜெகதீஸ்வரன் டிரெக்ஸ்காந்தன், அருந்தவராஜ் செந்தூரன், பெனடிக்ட் வெஸ்லி ஏபிரகாம், தேவராசா ஹரிசன் ஆகியோருக்கு ஓர் ஆண்டு சிறையும் வழங்கப்பட்டது. அத்துடன், பாதிக்கப்பட்டவருக்கு 8 குற்றவாளிகளும் 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் மீறினால் ஒரு ஆண்டு சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கடந்த மே மாதம் தீர்ப்பளித்தது.

இதனை மறுத்துக் குற்றவாளிகள் யாழ். மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்தனர். விசாரணைகளின் முடிவில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்றுத் தீர்ப்பு வழங்கினார். அதில் குற்றவாளிகளுக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தண்டனையை உறுதி செய்தார். மேலும் குற்றவாளிகளிடம் நீதிவான் நீதிமன்றம் தண்டம் அறவிடவில்லை என்பதை சுட்டிக் காட்டி, எண்மருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்தார். தண்டப் பணத்தை செலுத்தத் தவறின் ஒரு மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டிருந்தார். (ச)

**விடுவிக்க... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை நிறுத்தி வைக்கக் கோரிப் பேரறிவாளன் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் புதிய மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

அதில் "வெடிகுண்டில் வைக்கப்பட்ட பற்றரி நான் வாங்கி கொடுத்தது என்பது நிரூபிக்கப்படவில்லை. குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில் தனக்கு அளிக்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், மத்திய அரசு பேரறிவாளனை விடுவிக்க விரும்புகிறதா? இல்லையா? என்று கேள்வி எழுப்பியது. இது குறித்து 2 வாரத்தில் பதிலளிக்குமாறும் உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது, தற்போதைய சூழலில் சிறையிலிருந்து பேரறிவாளனை விடுவிக்க முடியாதென்றும், வெடிகுண்டு தொடர்பான சி.பி.ஐ. சிறப்பு குழுவின் விசாரணை அறிக்கையை பேரறிவாளன் தரப்பிடம் வழங்க உச்ச நீதிமன்றம் அனுமதியளித்தது.

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்
- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
எதிரொலி Ethiroli
021 3004848
நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்ஹட்டன் குண்டுவெடிப்பு: ஒருவர் கைது




நியூயோர்க்,டிசெ.13

அமெரிக்காவில் நியூயோர்க் நகரின் மன்ஹட்டன் பயணிகள் பேருந்துத் தரிப்பு நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பில் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் பங்களாதேஷ் ஏதிலியான 27 வயதுடைய அகேயட் உல்லா என்பவராவார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தத் தீவிரவாதத் தாக்குதல் சம்பவத்தில் நால்வர் காயங்களுக்குள்ளாகினர். தாக்குதலை மேற்கொண்டவர் காயமடைந்துள்ள நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)



# 'ஒரேஞ் எச்சரிக்கை!'

பரிஸ்,டிசெ.13

பிரான்ஸில் கடுமையான காற்று மற்றும் கடல் சீற்றத்துடன் காணப்படுவதால் பொதுமக்கள் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் இருக்கும்படி அரசாங்கம் நேற்று செவ்வாய்க்கிழமை எச்சரிக்கை விடுத்தது.

சாரண்டிஸ் கடலோரப் பகுதிகளில் மேற்கு நோக்கி வீசும் புயலால் 130 கி.மீ வேகத்தில் காற்று வீசக் கூடும் என்றும் தென்மேற்குப் பகுதிகள் கடுமையான சூறாவளிக் காற்றுக்கு ஆளாகக் கூடும் என்றும் அறிவிக்கப்பட்டது. தற்போது நாட்டின் இரண்டாவது பெரிய வானிலை எச்சரிக்கையான 'ஒரேஞ் எச்சரிக்கை' விடுக்கப்பட்டுள்ள நிலையில் 34 பாதுகாப்புத் துறைகள் எந்த நேரமும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்று வீசி வருவதால் பொதுமக்கள் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து அவரவர் இல்லத்திலேயே தங்கிவிடும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இதனால் ஏற்படக்கூடிய பெரும் அசம்பாவிதங்களிலிருந்து தற்காத்துக் கொள்ளும் விதமாக, பொதுமக்கள் மற்றும் குறிப்பாக கடலோரப்பகுதி மக்கள் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன் இருக்கும் படி பிரான்ஸ் அரசு எச்சரித்துள்ளது. (எ)

# ஈரான் - ஈராக் எல்லையில் நிலநடுக்கம்

பாக்தாத்,டிசெ.13

ஈரான் மற்றும் ஈராக் எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 6.0 ரிக்டர் அளவில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஈராக்கின் ஹலாப்ஜா நகரில் இருந்து 25.3 கி.மீ. தொலைவிலுள்ள பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.0 ஆக பதிவானது.

மேலும் சக்திவாய்ந்த இந்த நிலநடுக்கம் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள கட்டிடங்கள் குலுங்கியமையால் பொதுமக்கள் பீதியடைந்து வீடுகளை விட்டு வெளியேறித் தெருக்களில் ஒன்று திரண்டனர். சில கட்டிடங்கள் உடைந்து விழுந்தன. ஆனால் பெரிய அளவில் சேதம் ஏற்படவில்லை.

# கூட்டுப் போர் ஒத்திகை!



நியூயோர்க்,டிசெ.13

வடகொரியாவுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக கொரிய தீபகற்பப் பகுதியில் அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் கூட்டாகப் போர் ஒத்திகை நடத்தின.

கடந்த மாதம் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஹவாசோங்-15 என்னும் ஏவுகணைச் சோதனையை வடகொரியா வெற்றிகரமாக நடத்தியது. இந்த ஏவுகணை அமெரிக்காவின் அனைத்துப் பகுதிகளையும் தாக்கும் வல்லமை கொண்டது. இதனைத் தொடர்ந்து தென் கொரியாவுடன் இணைந்து பிரமாண்டப் போர் ஒத்திகையை அமெரிக்கா நடத்தியது. இது முடிவடைந்த பின்னர் தற்போது, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகளுடன் இணைந்து மீண்டும் கூட்டாகப் போர் ஒத்திகை நடத்தியுள்ளது. அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் ஆகியவற்றின் சார்பில் 4 நாசகாரிக் கப்பல்கள் உட்பட ஏராளமான போர்க்கப்பல்கள் ஒத்திகையில் ஈடுபட்டன. குறிப்பாக இந்தப் போர்க் கப்பல்கள், சக்திவாய்ந்த ஏவுகணைகள் தாக்க வருவதைக் கண்டறிந்து அவற்றை இடை மறித்துத் தாக்குவதற்குரிய சோதனைகளை நடத்துவதில் ஈடுபட்டன. வடகொரியா நடத்தும் ஏவுகணைச் சோதனைகள் பற்றி உடனுக்குடன் மூன்று நாடுகளும் பகிர்ந்து கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பதில் கவனம் செலுத்துவதே இந்தப் போர்ப் பயிற்சியின் நோக்கமென்றும், நேற்று முன்தினம் நடந்த இந்த ஒத்திகை நேற்றும் தொடர்ந்தது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பிறகு கொரிய தீபகற்ப பகுதியில் தென்கொரியா, ஜப்பான் ஆகியவற்றுடன் இணைந்து அமெரிக்கா நடத்தும் மிகப்பெரிய கடல்வழிப் போர் ஒத்திகை இதுவாகும்.(எ)

# அவர்தான் காதலன்



சென்னை,டிசெ.13

நாகினி சின்னத்திரையின் கதாநாயகியான மௌனி ராய் தன்னுடைய காதலைப் பற்றியும், தன்னுடைய காதலன் யார்? என்பது பற்றியும் தெளிவுபடுத்தியுள்ளார்.

நாகினி சீரியல் மூலம் இந்தியா முழுவதும்பிரபலமானவர்மௌனி ராய். இவர் 'டெவன் கே தேவ்' சீரியலில் சிவனாக நடிக்கும் மோஹித் ரெய்னாவுடன் காதலில் இருப்பதாகக் கிசுகிசுக்கப்பட்டு வந்த நிலையில், அவர் தங்களது காதல் பற்றி ஒரு நிகழ்ச்சியில் பேசியுள்ளார். மேலும் மோஹித் ரெய்னா தான் தன்னுடைய காதலன் எனவும் துணிச்சலாகக் கூறினார்.

ஆனால் 'மௌனி ராயுடன் காதல் என கிசுகிசுக்கப்படுவது பற்றி செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு, "நீங்களே கூறிவிட்டீர்கள் அது கிசுகிசு வதந்தி என்று" எனக் கூறிவிட்டுச் சிரித்தார் மோஹித் ரெய்னா. (எ)

# மீண்டும் திருநங்கைகள்!

## அமெரிக்க இராணுவத்தில்

வோஷிங்டன்,டிசெ.13

அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகள் சேர அதிபர் டிரம்ப் முட்டுக்கட்டை போட்ட நிலையில், நீதிமன்ற உத்தரவால் வரும் ஆண்டு முதல் திருநங்கைகள் சேர்க்கப்படுவார்கள் எனப் பெண்டகன் நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகளைச் சேர்க்கும் திட்டத்தை முன்னாள் அதிபர் பாரக் ஒபாமா கொண்டு வந்தார். இந்தத் திட்டத்தைப் பலரும் ஆதரித்த நிலையில், அதிபராக டொனால்ட் டிரம்ப் பொறுப்பேற்ற பின் அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகளைத் தேர்வு செய்வது தற்காலிகமாக ஒத்தி வைப்பதாக கூறப்பட்டது.

"என்னுடைய ஜெனரல்கள் மற்றும் இராணுவ நிபுணர்களுடன் ஆலோசித்த பிறகு அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகள் பணி புரிய அரசு அனுமதிக்காது என்பதைப் பரிந்துரைக்கிறேன். திருநங்கைகளால் இராணுவத்தில் ஏற்படும் அதிகளவிலான மருத்துவச் செலவுகள் மற்றும் பிளவுகள் இனி இருக்காது" என டிரம்ப் இது தொடர்பாகத் தெரிவித்திருந்தார்.

டிரம்ப் உத்தரவுக்கெதிராக நாடு முழுவதும் உள்ள திருநங்கைகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் போராட்டத்தில் இறங்கினர். நீதிமன்றங்களிலும் இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டது. வோஷிங்டன் மாகாண நீதிமன்றம் உட்பட மூன்று நீதிமன்றங்கள் டிரம்ப் அறிவிப்புக்குத் தடை விதித்தும், திருநங்கைகளை மீண்டும் சேர்க்க வேண்டும் எனவும் உத்தரவிட்டனர். இதனையடுத்து, வரும் ஜனவரி மாதம் முதல் இராணுவத்தில் திருநங்கைகள் வழக்கம் போல தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என இராணுவத் தலைமையக மான பெண்டகன் அறிவித்துள்ளது. (எ)


# களைகட்டியது ரஜினி பிறந்தநாள்

சென்னை,டிசெ.13

சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த்தின் 67ஆவது பிறந்த தினம் நேற்று செவ்வாய்க்கிழமையாகும்.

திரையுலக மற்றும் அரசியல் பிரபலங்கள் பலரும் அவருக்கு நேற்று வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

ரஜினிகாந்த் என்று அனைவராலும் அறியப்படும் சிவாஜி ராவ் கைக்வாட் டிசெம்பர் 12, 1950 மராட்டிய மாநிலத்தில் பிறந்தார். கன்டெக்டராகத் தனது பயணத்தைத் தொடங்கிய ரஜினிகாந்த், தமிழ் சினிமாவில் அறிமுகமாகித் தற்போது இந்திய சினிமாவில் முக்கிய நடிகராக வலம் வருகிறார். அவர் தனது 67ஆவது பிறந்த தினத்தை நேற்றுக் கொண்டாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்மால் 'அவுட்'?




டெல்லி, டிசெ.13

இலங்கை - இந்தியா அணிகளுக்கு இடையேயான அடுத்த இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் சுரங்க லக்மால் கலந்து கொள்வது சந்தேகம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய அணியுடன் டெல்லியில் இடம்பெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போது காற்று மாசால் சுரங்க லக்மால் பாதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் அவர் பூரணமாகக் குணமடையாத நிலையிலேயே முதலாவது ஒருநாள் போட்டியில் கலந்து கொண்டுள்ளார்.

எனவே அடுத்த போட்டிகளில் அவர் கலந்து கொள்வது சந்தேகம் தான் எனத் தெரிகிறது. பூரண குணமடைந்தால் மட்டுமே கலந்து கொள்ளுமாறு மற்ற வீரர்களும் லக்மாலைக் கோரியுள்ளனர். முதலாவது ஒருநாள் போட்டியில் சுரங்க லக்மால் 10 ஓவர்களை வீசி 13 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களை வீழ்த்தியதுடன் ஆட்டநாயகன் விருதையும் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மே.இ.தீவுகளுக்கு வெள்ளையடிப்பு



ஹமில்டன், டிசெ.13

நியூஸிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், ஹமில்டனில் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்த இரண்டாவது டெஸ்டையும் வென்ற நியூஸிலாந்து, மேற்கிந்தியத் தீவுகளை 2-0 என்ற ரீதியில் வெள்ளையடித்தது.

444 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், நேற்றைய நான்காம் நாளை 2 விக்கெட் இழப்புக்கு 30 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆரம்பித்து, 203 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து 240 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், றொஸ்டன் சேஸ் 64 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், நீல் வக்னர் 3, ட்றெண்ட் போல்ட், டிம் சௌதி, மிற்செல் சான்ட்னெர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக, நியூஸிலாந்து அணியின் இரண்டாவது இன்னிங்ஸில் சதம் பெற்ற றோஸ் டெய்லர் தெரிவானார்.

**போட்டிச் சுருக்கம்:**

நாணயச் சுழற்சியில் வெற்றி : மேற்கிந்தியத் தீவுகள்

**நியூஸிலாந்து:** 373/10 (துடுப்பாட்டம்: ஜீட் றாவல் 84, கொலின் டி கிரன்ட்ஹொம் 58, கேன் வில்லியம்சன் 43, ட்றெண்ட் போல்ட் ஆ.இ 37, டிம் சௌதி 31 ஓட்டங்கள்.

பந்துவீச்சு: ஷனோன் கப்ரியல் 4/119, கேமார் றோச் 3/58, மிக்கேல் கமின்ஸ் 2/57)

**மேற்கிந்தியத் தீவுகள்:** 221/10 (துடுப்பாட்டம்: கிரேய்க் பிறத்வெய்ட் 66, ஷேன் டௌரிச் 35 ஓட்டங்கள். பந்துவீச்சு: ட்றெண்ட் போல்ட் 4/73, டிம் சௌதி 2/34, கொலின் டி கிரான்ட்ஹொம் 2/40, நீல் வக்னர் 2/73)

**நியூஸிலாந்து:** 291ஃ8 (துடுப்பாட்டம்: றோஸ் டெய்லர் ஆ.இ 107, கேன் வில்லியம்சன் 54 ஓட்டங்கள். பந்துவீச்சு: மிக்கேல் கமின்ஸ் 3/69, றொஸ்டன் சேஸ் 2/51, ஷனோன் கப்ரியல் 2/52)

**மேற்கிந்தியத் தீவுகள்:** 203/10 (துடுப்பாட்டம்: றொஸ்டன் சேஸ் 64 ஓட்டங்கள். பந்துவீச்சு: நீல் வக்னர் 3/42, ட்றெண்ட் போல்ட் 2/52, டிம் சௌதி 2/71, மிற்செல் சான்ட்னெர் 2/13) (அ)




# வெற்றிக் கூச்சலால் அணிகள் அடிதடி!

லண்டன், டிசெ.13

மன்செஸ்டர் சிற்றி, மன்செஸ்டர் யுனைட்டெட் அணிகளுக்கிடையிலான போட்டி முடிந்த பின்னர் இரண்டு அணிகளின் வீரர்களும் கைகலப்பொன்றில் ஈடுபட்டுள்ளனர். குறித்த போட்டியில் வெற்றிபெற்ற மன்செஸ்டர் சிற்றியின் வீரர்கள் கொண்டாடிய விதம் மரியாதைக் குறைவாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு யுனைட்டெட்டின் அறைக்கு கேட்குமளவுக்கு அந்த அணியின் வெற்றிக் கூச்சல் எழுந்தது. இதனையடுத்தே இரண்டு அணிகளின் வீரர்கள், பயிற்சியாளர்களுக்கிடையே சிற்றியின் அறைக்கு வெளியே கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுனைட்டெட்டின் முகாமையாளர் ஜொஸே மொரின்யோ மீது பாலும் நீரும் எறியப்பட்டுள்ளது. சிற்றியின் கோல் காப்பாளர் எடேர்சனுடன் கைகலப்பில் அவர் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், மன்செஸ்டர் சிற்றியின் உதவிப் பயிற்றுவிப்பாளர் மிக்கேல் அர்டிட்டுக்கு தலையில் காயமேற்பட்டதாகவும் முகத்திலிருந்து இரத்தம் வழிந்தோடியதாகவும் கூறப்படுகிறது. (அ)

# மதுவால் வந்த வினை



லண்டன், டிசெ.13

அவுஸ்திரேலியச் சுற்றுப் பயணத்தில் எஞ்சியிருக்கும் அனைத்துப் போட்டிகளிலிருந்தும் இங்கிலாந்தின் துடுப்பாட்ட வீரர் பென் டக்கெட் இடைநிறுத்தப்பட்டுள்ளார். அத்துடன் அவரது நடத்தை தொடர்பாக எழுத்து மூலமாக இறுதி எச்சரிக்கையும் வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர இங்கிலாந்து லயன்ஸ் அணி வீரரொருவருக்கு விதிக்கப்படக் கூடிய அதிகூடிய தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தண்டமானது 1,500 ஸ்டேர்லிங் பவுண்ஸ்களாக இருக்கும் என நம்பப்படுகிறது.

டெஸ்ட் போட்டிகளுக்கான இங்கிலாந்தின் உப தலைவரான ஜேம்ஸ் அன்டர்சன் மீது கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை, மதுபான விடுதியொன்றில் வைத்து மதுவை டக்கெட் ஊற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# நான் கடவுள் அல்ல!



கொல்கத்தா, டிசெ. 13

கால்பந்து விளையாட்டின் ஜாம்பவான் என்று புகழப்படும் ஆர்ஜென்ரீனாவின் முன்னாள் வீரரான மரடோனா, 'தான் கால்பந்தின் கடவுள் அல்ல' என்று கூறியுள்ளார்.

கால்பந்து வரலாற்றில் மரடோனாவை ஜாம்பவான், கால்பந்து கடவுள் என்றெல்லாம் அழைப்பதுண்டு. தற்போது அவர் கொல்கத்தா சென்றுள்ளார். அங்குள்ள 12 அடி உயர அவரின் சிலையை திறந்து வைத்தார்.

பின்னர் பேசுகையில், "நான் கால்பந்தின் கடவுள் அல்ல. ஆனால், ஒரு சாதாரண கால்பந்து வீரர். என்னுடைய சிலையை நானே திறப்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 13.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.